# பீகாரில் தற்காலிகமாக ஜனாதிபதி ஆட்சி அமுல்


Registered as a News paper in Ceylon விலை சதம் 15 ★

ஈழநாடு
சந்தா
தினப் பதிப்பு
மூன்று மாதம் — ரூ. 18-00
ஆறு மாதம் — ரூ. 34-00
ஒரு வருடம் — ரூ. 66-00

# ஈழநாடு

EELANADU

தபால்பெட்டி எண்: 49
போன்: 389
National Tamil Daily
மலர் 11
இதழ்:143
தேசிய தினசரி

ஈழநாடு
சந்தா
வாரப்பதிப்பு மாத்திரம்
மூன்று மாதம் — ரூ. 4-00
ஆறு மாதம் — ரூ. 7-50
ஒரு வருடம் — ரூ. 14-00
முற்பணம் கட்ட வேண்டும்
தபால் அல்லது ஆள்மூலம் அனுப்பப்படும்.

யாழ்ப்பாணம் ஆனி 21 ரபி. ஆகி 19 சனிக்கிழமை [5-7-69]


புதுடில்லி, ஜூலை 4
பீகார் இராஜ்யத்தின் ஜனாதிபதி ஆட்சி பிரகடனப் படுத்தப்பட்டுள்ளது.

இது தற்காலிகமானதே ராஜ்யத்தின் அரசியல் சூழ்நிலை மறுபடி சீராகி ஸ்திர நிலைமை உருவாகியவுடன் ஜனாதிபதி ஆட்சி ரத்து செய்யப்படும்.

இன்று வெளியான ஜனாதிபதியின் பிரகடனத்தில் பீகாரில் ஜனாதிபதி ஆட்சி தற்காலிகமாக அமுலாக்கப் படுவதாகவும் ராஜ்யத்தின் சட்ட சபைகள் இயங்குவது நிறுத்திவைக்கப் பட்டிருப்பதாகவும் அறிவிக்கப் பட்டது. இதிலிருந்து ராஜ்ய சட்டசபைகள் கலைக்கப்படவில்லையென்பது தெளிவாகின்றது.

பீகாரில் ஸ்திரமான ஆட்சியை ஏற்படுத்தக் கூடிய வகையில் அரசியல் கட்சி எதுவாகிலும் ஆதரவு பெறும் பட்சத்தில் அங்கே மீண்டும் சட்ட சபைகள் இயங்க ஆரம்பிக்குமென்றும் ஜனாதிபதி ஆட்சி இரத்தாகும் என்றும் கருதப்படுகின்றது.

பீகார் கவர்னர் நித்தியானந்த கனுங்கோ ஞாயிற்றுக் கிழமை புதுடில்லி வருவார். மத்திய தலைவர்களுக்கு அவர் பீகார் நிலைமை பற்றி விளக்குவார் என்று தெரிகின்றது.

# கோட்டை முனியப்பர் முன் பட்டதாரிகள் உண்ணாவிரதம்

## உடுவில் எம்.பி. யோசனைக்கு இணங்கி கைவிடப்பட்டது

யாழ்ப்பாணம், சனி

**நேற்றுக்காலை யாழ்ப்பாணம் முனியப்பர் கோவில் வாசலில் ஆரம்பமான அகில இலங்கை வேலையற்ற பட்டதாரிகளின் உண்ணாவிரதம் உடுவில் எம். பி. திரு. வி. தர்மலிங்கம் அளித்த வேலை வழங்கும் சில யோசனைகளைத் தொடர்ந்து நேற்று நண்பகலை கைவிடப்பட்டது.**

வேலையற்ற பட்டதாரிகளின் கோரிக்கைகளை ஜூன் மாதத்திற்கு முன் கவனிப்பதாக கொடுத்த வாக்குறுதியை பிரதமமந்திரி கவனிக்கவில்லையெனத் தெரிவித்து நேற்றுக்காலை இந்த உண்ணாவிரதம் ஆரம்பமானது. சங்கத் தலைவர் திரு. கே சதானந்தன் தலைமையில் திருவாளர்கள் ஆர் சிவராசா, பி. பாலசுப்பிர

பெற்ற இடத்துக்குச் சென்ற உடுவில் எம். பி. திரு. வி. தர்மலிங்கம் பின்வரும் வாக்குகளை அவர்களுக்குக் கொடுத்தார்.

0 விவசாய அடிப்படையில் கூட்டுறவுப் பண்ணைகள் ஸ்தாபிக்க காணியும், அதற்கான கடன் வசதியும் பெற சம்பந்தப்பட்ட அமைச்சர்களுடன் பேச்சுவார்த்தை நடாத்துவது



## மலையகத்துப் பாக்கியம் தீக்குப் பலி

கொழும்பு, வெள்ளி

இரத்தினபுரியிலுள்ள தோட்டமொன்றில் முத்துசாமி என்ற தோட்டத் தொழிலாளியின் மகளான பாக்கியம் என்ற 15 வயதுடைய யுவதி போத்தல் விளக்கிலிருந்து தீப்பற்றிக்கொண்டதால் எரிந்து மரணமானார்.

இது சம்பந்தமாக மரண விசாரணை நடத்திய மரண விசாரணை அதிகாரி திரு.ஜே. ஏ. செல்வரத்தினம் தோட்டத்தொழிலாளர்கள் இந்த நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கு பெரிதும் உதவிக்கொண்டிருந்த போதும் அவர்களது வாழ்க்கை போதிய பாதுகாப்பின்றியிருந்து வருகிறதென்றும், இதன் காரணமாகவே இவ்வித பரிதாப முடிவுகள் ஏற்படுகின்றன என்றும் தெரிவித்து விபத்திஞல் ஏற்பட்ட மரணம் எனத் தீர்ப்பளித்தார்.

## இந்திரா திரும்பினார்

புதுடில்லி ஜூலை 3

ஜப்பான், இந்தோனிஷியா ஆகிய நாடுகளில் தனது 10 நாள் நல்லெண்ண விஜயத்தை முடித்துக் கொண்ட பாரதப் பிரதமர் திருமதி. இந்திராகாந்தி இன்று புதுடில்லி திரும்பினார்.

யாழ். ஆஸ்பத்திரி

## மூன்று டாக்டர்கள் மீது ஒழுங்குநடவடிக்கைவிசாரணை

யாழ்ப்பாணம், சனி

பெண்டாக்டர் ஒருவரை கடமையிலிருக்கும் போது தகாத வார்த்தைகளால் பேசியதாகக் குற்றம் சாட்டப்பட்ட ஆண்டாக்டர் ஒருவருக்கு எதிராத மேலும் இரண்டு புகார்களை நோயாளிகள் ஒரே நேரத்தில் ஆஸ்பத்திரி அதிகாரியிடம் செய்துள்ளனர்.

யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரி வெளிநோயாளர்சிகிச்சை நிலையத்தில் கடமையாற்றும் இந்தஆண்டாக்டர் சிகிச்சை பெறச் செல்லும் நோயாளிகளிடம் இங்கிதமில்லாமல் நடந்துகொள்வதாகப் புகார் செய்யப்பட்டுள்ளது.

ஏற்கனவேயே தண்டனை இடமாற்றம் பெற்று இங்கு வந்த இவரது நடத்தை பற்றி நடாத்தப்பட்ட விசாரணையின் பின்னர் இவருக்கு சேவையிலிருந்து கட்டாய ஓய்வு கொடுக்க வேண்டுமென்று சௌக்கிய சேவை மேலிடத்துக்கு சிபார்சு செய்யப்பட்டுள்ளதாகவும் தெரிகின்றது.

இது மட்டுமன்றி இங்கு கடமையாற்றும் மற்றொரு ஆண்டாக்டர் இரவு நேரத்தில் மது போதையில் வந்து ஆஸ்பத்திரி சிறு ஊழியர் ஒருவருடன் தகாதமுறையில் நடந்து கொள்ள எத்தனித்ததாகக் கிடைத்த புகார் மீதும் ஆஸ்பத்திரி சுப்பிரிண்டன்ட் டாக்டர் ரி. சண்முகநாதன் விசாரணையை மேற்கொண்டுள்ளார்.

சிரேஷ்ட டாக்டர் ஒருவர் ஆஸ்பத்திரிக்குள் மது போதையில் கலாட்டா செய்ததென்ற புகாரில் அவர் மீதும் சுகாதார இலாகா இப்போது விசாரணையை மேற்கொண்டுள்ளது. (கா. நி.)

## முஸ்லிம் உறுப்பினருக்கு தமிழ்சங்கம் பணமுடிப்பு

யாழ்ப்பாணம், சனி

யாழ்ப்பாண மாநகரசபையின் 21-ம் வட்டார உறுப்பினரான ஜனாப் எம். ஜி. பசீருக்கு யாழ். தமிழ்ச்சங்கத்தினர் சென்ற வியாழக்கிழமை ஒரு வரவேற்பளித்து பண முடிப்பு ஒன்றையும் வழங்கினர்.

இவ்வரவேற்பின்போது உரை நிகழ்த்திய சங்கத்தலைவர் திரு. எஸ்.தவேந்திரன், இனமத பேதமின்றி சகலருக்கும் தொண்டாற்றி முன்னேறியவர் ஜனாப் பசீர் என எடுத்துக் கூறினார்.

ஜனாப் பசீர் தமக்களிக்கப்பட்ட வரவேற்புக்கு நன்றி தெரிவித்துப்பேசுகையில், சங்கத்தில் தான் ஓர் உறுப்பினராக இருந்து தொடர்ந்து அதன் வளர்ச்சிக்காக தம்மாலியன்றளவு உழைத்து வரப்போவதாக எடுத்துக் கூறினார்.

தமக்கு வழங்கப்பட்ட பணமுடிப்பை சங்கத்தின் தேவைகளுக்குப் பயன்படுத்தும்படி ஜனாப் பசீர் அதனை சங்கப் பொருளாளரிடம் திருப்பிக் கையளித்தார்.

திருவாளர்கள் எஸ். குட்டி, எஸ். சுப்பிரமணியம், எஸ். சின்னத்துரை, சங்க உபதலைவர் பி. பத்மநாதன் ஆகியோரும் பேசினர்.

## சங்காபிஷேகம்

துணுக்காய், வெள்ளி

துணுக்காய்ப் பிள்ளையார் கோவில் மணவாளக் கோலத் திருவிழா இன்று நடைபெற்றது. பகல் அஷ்டோத்திர சத சங்காபிஷேகமும் இரவு சுவாமி வீதி உலாவும் நடைபெற்றன. விசேஷ மேளக் கச்சேரிகளும் மகேசுர பூசையும் நடைபெற்றன.

......

## கலை விஞ்ஞான கண்காட்சி

சுன்னுகம், வெள்ளி

இன்று சுன்னுகம் ஸ்கந்தவரோதயாக் கல்லூரியில் நடை பெறவிருக்கும் கலை விஞ்ஞானக் கண்காட்சியில் மாணவருக்கும் ஏனையோருக்கும் உதவும் வகையில் பகுதி பகுதியாகக் காட்சிப் பொருள்கள் இடம்பெறுகின்றன. விஞ்ஞானப் பகுதியில் காங்கேசனதுறை சீமேந்துத் தொழிற்சாலை இயங்கும் முறைகள், கடல் நீரிலிருந்து மக்னீசியம் எடுக்கும் முறை, புகைப்படத் தயாரிப்பு, புல் எண்ணெய், கறுவா எண்ணெய் வடிக்கும் மாதிரி ஆகியன இடம்பெறுகின்றன.

பறக்கும் நிலையில் ஆகாய விமானம் ஒன்று காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளது.

தாவரங்கள் உண்டு உறங்குவதை விளக்கும் காட்சியையும் காணலாம்.

உலக சரித்திரத்தில் முக்கியமான சம்பவங்கள் இலங்கையில் சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த இடங்கள் புவியியல் மாணவருக்கு உதவக் கூடியதாக இருக்கும். சங்கீதப் பிரியர்களுக்கு வேண்டிய இசைக் கருவிகளும் காட்சியில் இடம்பெறுகின்றன. கண்காட்சியை வடமானில கல்வி அதிகாரி திரு. எஸ். தணிகாசலம் திறந்து வைக்கிறார்.

அமெரிக்காவிலிருந்து வந்தவைகளை விட

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போதிய பாதுகாப்பின்றியி ருந்து வருகிறதென்றும், இதன் காரணமாகவே இவ்

...இன்று ... திரும் பிஞர்.

# தேசிய சுவீப் முடிவுகள்

கொழும்பு, வெள்ளி நேற்று இழுக்கப்பட்ட, 253-வது தேசிய சுவீப் முடிவுகள் வருமாறு:

1-வது பரிசு
08 T 0608 - ரூ 98,380

2-வது பரிசு
23 F 0965 - ரூ. 39,352

3-வது பரிசு
10 T 0924 - ரூ. 9,838

தலா 491 ரூபா 38 சதம் பெறும் 100 ஆறுதல் பரிசுகள் விபரம் வருமாறு:

| | |
|---|---|
| 40 A 0729 | 20 A 0188 |
| 17 A 0219 | 24 A 0029 |
| 12 A 0811 | 02 B 0025 |
| 20 B 0547 | 37 B 0523 |
| 13 B 0416 | 08 B 0532 |
| 17 B 0486 | 17 B 0206 |
| 29 B 0799 | 22 B 0792 |
| 18 B 0827 | 39 D 0791 |
| 07 D 0928 | 06 D 0710 |
| 32 D 0735 | 18 D 0439 |
| 06 E 0673 | 37 E 0655 |
| 31 E 0604 | 19 E 0875 |
| 08 E 0177 | 25 F 0991 |
| 07 F 0806 | 37 F 0261 |
| 26 G 0205 | 20 G 0972 |
| 38 G 0639 | 38 H 0123 |
| 28 H 0312 | 01 H 0275 |
| 17 H 0192 | 30 J 0060 |
| 06 J 0150 | 07 J 0794 |
| 39 J 0023 | 43 J 0090 |

| | |
|---|---|
| 02 J 0351 | 13 K 0576 |
| 44 K 0202 | 31 L 0777 |
| 33 L 0641 | 10 L 0053 |
| 11 L 0801 | 02 M 0258 |
| 18 M 0102 | 30 M 0833 |
| 09 M 0163 | 36 N 0539 |
| 06 N 0631 | 03 N 0575 |
| 04 N 0966 | 02 N 0597 |
| 09 N 0630 | |
| 06 O 0015 | 03 O 0294 |
| 02 O 0718 | 02 P 0458 |
| 07 Q 0746 | 27 Q 0335 |
| 12 Q 0458 | 08 Q 0959 |
| 42 R 0449 | 14 R 0611 |
| 22 R 0803 | 04 R 0223 |
| 22 S 0019 | 43 T 0971 |
| 40 U 0730 | 44 U 0143 |
| 37 U 0658 | 30 V 0127 |
| 31 V 0063 | 25 V 0576 |
| 12 V 0176 | 34 V 0692 |
| 21 V 0748 | 22 V 0967 |
| 28 W 0087 | 16 W 0561 |
| 43 W0650 | 16 X 0010 |
| 33 X 0133 | 12 X 0760 |
| 04 X 0709 | 39 X 0708 |
| 26 X 0134 | 18 X 0398 |
| 40 Y 0300 | 25 Y 0944 |
| 33 Y 0235 | 30 Y 0232 |
| 23 Y 0033 | |
| 02 Z 0354 | 13 Z 0937 |
| 20 Z 0425 | 01 Z 0453 |

(இவை யாவும் உறுதிப் படுத்தப்படவேண்டும்)

...வித்து நேற்றுக்காலை இந்த உண்ணாவிரதம் ஆரம்பமானது. சங்கத் தலைவர் திரு. கே சதானந்தன் தலைமையில் திருவாளர்கள் ஆர் சிவராசா, பி. பாலசுப்பிரமணியம், இ. கணேசன், எஸ். பாலசுப்பிரமணியம் ஆகியோர் இந்த உண்ணாவிரதத்தில் கலந்துகொண்டனர்.

உண்ணாவிரதம் நடை...

...யில் கூட்டுறவுப் பண்ணைகள் ஸ்தாபிக்க காணியும், அதற்கான கடன் வசதியும் பெற சம்பந்தப்பட்ட அமைச்சர்களுடன் பேச்சுவார்த்தை நடாத்துவது

தமிழரசுக்கட்சிப்பிரமுகர்கள் பலம் ஒன்று சேர்ந்து இலங்கையின் பிரபல வர்த்தகர்களையும், கைத்தொழிலதிபர்களையும் சந்தித்து பட்டதாரிகள் வேலையில்லாப் பிரச்னையைச் சுலபமாகத் தீர்க்க வேலை வழங்குமாறு வற்புறுத்துவது:

0 ஆங்கிலம் தெரிந்த பட்டதாரிகளை அரசாங்கத்தின் ஆதரவுடன் வெளிநாடுகளுக்கு அனுப்புவது

உடுவில் எம். பி. தெரிவித்த ோசனைகளை ஏற்றுக்கொண்ட மேற்படி சங்கத்தினர், இப் பேச்சுவார்த்தைகளில் தமது சங்கத்தின் சார்பில் உபகுழுவொன்றையும் கலந்துகொள்ள அனுப்புவதாகச் சம்மதம் கொடுத்தனர்.

இப்பேச்சுவார்த்தைகளும், நடவடிக்கைகளும் கூடிய கெதியில் மேற்கொள்ளப்படுமென்று திரு. வி தர்மலிங்கம் எம். பி. தெரிவித்தார். (கா. நி)

<u>அத்துளு குளத் திட்டம்</u>

## அதிகாரிகளுக்கு வேண்டுகோள்

உடுப்பிட்டி, வெள்ளி

கரவெட்டி அத்துளு குளக்குளாய் நீர் விநியோகத்திற்குப் பாவிக்கப்பட விருக்கும் நீர் 'சவர்' தன்மை உள்ளதாக இருப்பதாக இப்பகுதிப் பொதுமக்கள் அச்சம் தெரிவித்துள்ளனர். இந்நீரை 'ருசி' பார்த்த சிலர் இத் தகவலைத் தெரிவித்துள்ளனர்.

இதுபற்றி ஆராய்ந்து உடன் தடுப்பு நடவடிக்கைகள் மேற்கொண்டு சவர் தன்மையை மாற்றுமாறு நீர்ப்பாசனத் திட்ட அதிகாரிகளுக்கு வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

## சிங்களம்பயில சென்றவர் கூப்பன்களை இழந்து திரு பினராய்

யாழ்ப்பாணம், சனி

மாத்தறையில் சிங்கள மொழி மூலம் கல்வி பயிலவும் பௌத்த சமயம் படிப்பதற்கும் இங்கிருந்து சென்ற ஹரிஜன மாணவர்கள் தங்கள் பங்கீட்டரிசிப் புத்தகங்களையும் இழந்து இங்கு திரும்பியிருக்கின்றூர்கள்.

மாத்தறையில் தங்களுக்குக் கல்வி கற்க போதிய வசதியளிக்கப்படவில்லையென்றும், பல வேலைகள் செய்யவே தாங்கள் பயன்படுத்தப்பட்டதாகவும் அம் மாணவர்களில் ஒருவர் தெரிவித்தார்.

இங்கு வந்த மாணவர்கள் நேற்று உடுவில் எம். பி. திரு. வி. தர்மலிங்கத்தைச் சந்தித்து தாங்கள் பல விதத்திலும் துன்புறுத்தப்பட்டதாகத் தெரிவித்தனர்.

தற்பொழுது புத்தபிக்குகளிடம் இருக்கும் தங்கள் பங்கீட்டரிசிப் புத்தகங்களைப் பெற்றுத் தருமாறு அவர்கள் உடுவில் எம். பி. யிடம் கேட்டுள்ளனர். சம்பந்தப்பட்டவர்களுடன் தொடர்பு கொண்டு இதற்கான நடவடிக்கை எடுப்பதாக உடுவில் எம். பி. தெரிவித்தார். (கா. நி.)

<u>கூ. மொ. வி. ஸ்தாபன</u>

## கொள்ளை வழக்கில் 6 பேருக்கு 20 வருட கடுழியச் சிறை

கொழும்பு, வியாழன்

**கொழும்பு விக்டோரியா பாலத்தில் 1966ம் வருடம் நடைபெற்ற கூட்டுறவு மொத்த விற்பனவு ஸ்தாபனத்துக்குச் சொந்தமான 9 லட்சம் ரூபாவரையான கொள்ளை வழக்கில் சம்பந்தப்பட்ட முதல் 6 எதிரிகளுக்கு இன்று தலா 20 வருட கடுழிய சிறைத் தண்டனை விதிக்கப்பட்டது.**

கடந்த 1966- வருடம் நவம்பர்29-ம் திகதி கொழும்பு கூட்டுறவுமொத்த விற்பனவு ஸ்தாபன வானை விக்டோறியா பாலத்துக்கருகில் வழிமறித்து 8 லட்சத்து 99 ஆயிரம் 138 ரூபாவைக் கொள்ளையடித்தது சம்பந்தமாக 8 பேர் மீது குற்றம்சாட்டப்பட்டு வழக்கு தொடரப்பட்டிருந்தது

இவ்வழக்கை விசாரணை செய்த கொழும்பு அசைஸ் நீதிமன்ற கமிஷனர் திரு. ரி.பீ. திஸநாயகா எதிரிகள் குற்றவாளிகள் என ஜூரிமார்கள் ஏகமனதாக முடிவு செய்ததைத் தொடர்ந்து முதல் 6 எதிரிகளுக்கும் தலா 20 வருட கடுழிய சிறைத் தண்டனையும் மற்ற இருவருக்கும் தலா 12வருட கடுழிய சிறைத்தண்டனையும் விதித்துத் தீர்ப்பளித்தார்.

இவ்வழக்கு விசாரணையைப் பார்வையிட நீதிமன்றத்தில் பெருந் திரளானோர் கூடியிருந்தனர்.

ஜி. எஸ். ஓ. பியசேன, வில்சன் தர்மராசா, ஜே. சிறிசேன, பி. ஓ சிறிசேன, ஜே. ஒ' அன்று அப்புகாமி, எம். சிறிசேன ஆகியோர் இவ்வழக்கில் குற்றவாளிகளாகக் காணப்பட்டனர்.

அட்வகேட் சி. சந்திரகாசன் முதலாம் எதிரிக்கும் சரத்முத்தட்டுகம 2-ம் எதிரிக்கும் ஆஜராகியிருந்தார்கள்.




# 'ஈழநாடு'

பத்தாவதாண்டு நிறைவு இலக்கியப்போட்டியில்

★ ரூ.500-00 பரிசுபெற்ற காவியம் — 'சங்கிலியம்' மற்றும்

★ முதற்பரிசு பெற்ற 'கங்குமட்டை' (சிறுகதை)

★ 'விடிய இன்னும் நேரமிருக்கு' (ஓரங்க நாடகம்)

★ 'வானம்பாடி' (கவிதை)

இத்தனையும் நாளை (6-7-69) 'ஈழநாடு' வாரமலரில் நீங்கள் படித்துச்சுவைக்கலாம் அத்துடன்

மாணவர் மலர், குடும்பச்சுடர், கலை அரங்கம், அரசியல் நிருபர் எழுதும் வாரசாரம், வேல்ஸ் இளவரசாக பட்டம் சூட்டப் பெற்றுள்ள இளவரசர் சாள்ஸ் பற்றியும், தீண்டாமைப் பிரச்னைக்கு சில யோசனைகள் கூறும் கட்டுரையும்.

ஸ்ரீலஸ்ரீ சுவாமிநாதத் தம்பிரான் எழுதிவரும் 'கம்பர் கவி விருந்து' தொடர்கட்டுரையும்.

உங்கள் அறிவுப் பசிக்கு விருந்தாகவருகின்றன.

நாளை 'ஈழநாடு வாரமலர்' வாங்கத்தவருதீர்கள்.

பக்கங்கள் 16
விலை வழமைபோல்
20 சதம் தான்


...ஞர்.

ஜனுப் பசிர் தமக்களிக்கப்பட்ட வரவேற்புக்கு நன்றி ... சங்க உபதலைவர் பி. பத்மநாதன் ஆகியோரும் பேசினர்.

... அதிகாரி திரு.எஸ். தணிகாசலம் திறந்து வைக்கிறார்.

<u>அமெரிக்காவிலிருந்து வந்தவைகளை விட</u>

## இலங்கையிலிருந்து அமெரிக்காவுக்கு சென்ற பொருள்கள் தான் அதிகம்

### யு. எஸ். சுந்திரதினத்தை யொட்டி திரு. கொரி விடுத்துள்ள அறிக்கை

கொழும்பு, வெள்ளி

இலங்கையில் ஏறத்தாழ 15 அமெரிக்க நிறுவனங்கள் கிளைகளை நிறுவி இந்த நாட்டின் அபிவிருத்திக்கு உதவிவருவதாக அமெரிக்க தூதுவர் திரு அன்ட்ரு வி. கொரி அமெரிக்காவின் சுதந்திரதினத்தையொட்டி வெளியிட்டுள்ள ஒரு செய்தியில் குறிப்பிட்டிருக்கிறார்.

''இலங்கையில் அமெரிக்க நாட்டின் தூதனுகக் கடமையாற்றுவதனுல், இந்த அழகிய நாட்டுடன் நாங்கள் கொண்டிருக்கும் உறவினையிட்டு நினைவு கொள்ள விரும்புகிறேன். மற்றெல்லாவகையான ஒற்றுமைகளையும்விட எமது இரு தேசங்களும் ஜனநாயக ஆட்சிமுறையை அனுசரித்து வருவதனுல் நம் உறவுமுறை வலுவடைகிறது.

பல ஆண்டுகளாக இரு நாடுகளுக்குமிடையே மக்கள் மத்தியில் நல்லுறவு வளர்ந்துவந்திருக்கிறது. அண்மையில் அமெரிக்க விமான நிறுவனம் ஒன்று தன்னுடைய சேவையினை அதிகரித்திருப்பதன் மூலம், இந்த நாட்டிற்கு வந்து இதன் அழகினை ரசிக்கும் பிரயாணிகள் அதிகரித்திருக்கின்றனர். இந்த வருடம் ஜனவரி மாதம் தொடக்கம் மார்ச்மாதம் வரை மட்டும் மொத்தம் 1,407 அமெரிக்க சுற்றுலாக்காரர்கள் இந்த நாட்டுக்கு வந்திருக்கின்றனர். கடந்த காலத்தினைவிட இத்தொகை வெகுவாக அதிகரித்திருக்கிறது.

இலங்கையிலிருந்தும் அமெரிக்காவுக்கு பலர் அடிக்கடி செல்கின்றனர். அதிகமானேர் மேற்படிப்புக்காகவே செல்லுகின்றனர் என்று அவர் தமது அறிக்கையில் மேலும் கூறியுள்ளார்.

''ஏறத்தாழ 15 அமெரிக்க நிறுவனங்கள் இலங்கையில் கிளைகளை நிறுவியுள்ளன. இன்னும் பல கம்பெனிகள் இலங்கையிலுள்ள வேறு சில நிறுவனங்களுக்கு தங்கள் பிரதிநிதித்துவத்தைக் கொடுத்துள்ளன.

கடந்த ஆண்டு இலங்கைத் தேயிலை அமெரிக்காவில் அதிகமாக இடம்பிடிக்காமற்போன போதிலும் மற்றுமுள்ள பொருட்கள் பல அமெரிக்காவில் சந்தைப்படுத்தத்தக்க இடத்தைப் பெற்றுக்கொண்டன. கொக்கோ பட்டர், காலணிகள், ரப்பர் பொருட்கள், பைசிக்கிள்கள் போன்றவை அமெரிக்காவுக்குத் தருவிக்கப்பட்டன.

கடந்தஆண்டு அமெரிக்காவிலிருந்து இலங்கைக்கு வந்த பொருட்களை விட இலங்கை அமெரிக்காவுக்கு அனுப்பிய பொருட்கள் அனேகம் என்று சொல்லலாம். இலங்கைக்கு அமெரிக்கா வழங்கும் பொருட்களும் இலங்கையில் வெளிநாட்டுச் செலாவணியில் பாதிப்பு ஏற்படுத்தாதவகையில் கண்காணிக்கப்பட்டு வந்தன என்று கூறும் திரு. கொரி இலங்கைக்கும் அமெரிக்காவுக்குமிடையில் இடம்பெற்றுள்ள பல்வேறு பரிவர்த்தனைகள் பற்றியும் விபரமாகக் குறிப்பிடுகின்றூர்.

''நம் இரு நாடுகளுக்குமிடையில் பன்னெடுங்காலமாக வளர்ந்துகொண்டுவரும் இத்தகைய நட்புமென்மேலும் வளர்ந்து எல்லோருக்கும் பலனளிக்க வேண்டும் என்பதே இந்த தேசிய தினத்தில் என்னுடைய எண்ணமாகும்'' என்று திரு. கொரி முடிவாகத் தமது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

<u>மாவை ஆலயப்பிரவேச</u>

## சமரச உடன்பாடு இன்று வெளியிடப்படும்

யாழ்ப்பாணம், சனி

மாவிட்டபுரம் கந்தசுவாமிவிகோவில் ஆலயப்பிரவேசம் சம்பந்தமாக இருபகுதியினருக்குமிடையே ஏற்பட்டுள்ள சமரச உடன்பாடு இன்று காலை 9 மணிக்கு மல்லாகம் நீதிமன்றத்தில் வெளியிடப்படுமென சம்பந்தப்பட்ட பிரமுகர் ஒருவர் தெரிவித்தார்.

மாவிட்டபுரம் ஆதீனகர்த்தா துரைச்சாமிகுருக்கள், முன்னுள் வவனியா எம்.பி. திரு. சி. சுந்தரலிங்கம், வடபகுதி பொலிஸ் அதிபர் திரு ஆர். சுந்தரலிங்கம், முடிக்குரிய அட்வகேட் திரு. எல். டி.குமாரசாமி, செனட்டர் எஸ். நடராசா ஆகியோர் கலந்துகொண்ட சமரச மகாநாட்டில் இந்த உடன்பாடு தயாரிக்கப்பட்டது.

இந்த உடன்பாடு இரு பகுதியினராலும் ஏற்றுக்கொள்ளப்பட்டதாக தெரியவருகிறது.

பொலிஸ் தலைமைப்பீடத்தின் அங்கீகாரத்திற்காக இச் சமரச உடன்பாடு திட்டம் அனுப்பப்பட்டதாகவும் தெரியவருகிறது.

## பால் உணவு

கோட்டை, வெள்ளி

சமீபத்தில் நாடெங்கும் குழந்தைகளுக்கு பால் உணவுத் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதைத் தொடர்ந்து உணவு விவசாயதிணைக்களம் மறுபடியும்கூப்பனுக்கு பால்மா வழங்க கூட்டுறவுச் சங்கங்களுக்கும், உத்தரவு பெற்ற வியாபாரிகளுக்கு உத்தரவிட்டுள்ளது.

குழந்தைகளின் கூப்பனுக்கு மட்டுமேயன்றி மற்ற கூப்பன்களுக்கு வழங்கக் கூடாதெனவும் இம்மாத இறுதியில் மற்றக் கூப்பன்களுக்கு வழங்க ஏற்பாடு செய்யப்படும் எனவும் திணைக்களம் தெரிவித்துள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வரிவிளம்பரம்

## காணவில்லை

ஈவினை புன்னாலைக்கட்டுவனைச் சேர்ந்த மருதன் சுப்பிரமணியம் எனும் 15 வயதுச் சிறுவனை 20-5-69 செவ்வாய்க்கிழமை பகல் 2 மணி தொடக்கம் காணவில்லை. சிவந்த நிறம், மெல்லிய தேகம். கடைசியாக தெற்குப் புன்னாலைக்கட்டுவன் சந்தியில் இச்சிறுவன் காணப்பட்டான் இப்பையன் இருக்கும் இடத்தை அறிவித்தால் தகுந்த சன்மானம் வழங்கப்படும். M. K. செல்லையா, ஈவினை, புன்னாலைக்கட்டுவன். 1222

## தேவை

டிராக்டர், றெயிலர் செலுத்தக்கூடிய சாரதிகள் தேவை. விபரங்களுக்கு திரு. சி. மணி, ஜவர்ஜி பிறதேர்ஸ், 218, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். 1223

தண்ணீர் பம்புகள், ஸ்பிறேயர் கருவிகள் ஆகியனவற்றை பழுதுபார்த்துத் திருத்துவதில் நல்ல திறமையும் அனுபவமுமுள்ள மெக்கானிக்கர்கள் உடனே தேவை. தங்குவதற்கு இடவசதியளிக்கப்படும். கடிதமூலமோ நேர்முகமாகவோ தொடர்புகொள்க:- ஒட்டோஸ் ஏஜன்சீஸ், 107, கண்டி வீதி, வவுனியா. 1228

## கல்வி

மார்கழி க. பொ. த. சாதாரண உயர்தர பரீட்சைக்கான விஞ்ஞானம், கலை, வர்த்தகம், சிங்களம், ஆங்கிலம், தையல் காலை, மாலை, கிழமை இறுதியிலும், 6 மாச விசேட வகுப்புக்கள் 47 வருட வர்த்தக ஆசிரியராலும், பல வருட அனுபவமுள்ள பட்டதாரிகளாலும் நடாத்தப்படுகின்றன. இருபாலாருக்கும் விடுதி வசதியுண்டு. வர்த்தகக் கல்லூரி, பருத்தித்துறை: 1924-ம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டது. 1232


REGAL JAFFNA
Daily 4-45, 7 & 9-45 p.m
Robert Vaughn
Eleanor Parker
in
How to steal the World

MANOHARA
JAFFNA
Daily 2, 6 & 10-00 P.M
Yul Brynner
in
TEN


## அறிவிப்பு

றீகல் சவுண்ட்ஸ் ஸ்தாபனத்தார் பொதுமக்களுக்கு அறிவித்ததன்படி எங்கள் வாகனத்தில் வாங்கிய ஜாதிக சம்பத டிக்கெட்டுகளுக்கு மாத்திரம் றலி சயிக்கிள் ஒன்றினை பரிசாக வழங்குவதாக அறிவித்திருந்தோம். பின்வரும் டிக்கெட் இலக்கமுடையவர் மேற்படி பரிசை பெற்றுக் கொள்ளலாம். 02 R 000526 றீகல் சவுண்ட்ஸ் ஸ்தாபனம் ஈச்சமட்டை பீச்றோட், யாழ்ப்பாணம். 1637

## லொறி விற்பனை செய்வதற்கு கேள்விப் பத்திரம்

வலிகாமம் கிழக்கு ப. நோ. கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத் தலைவர் 16-7-69 திகதி புதன்கிழமை முற்பகல் 10-00 மணி வரை. ஷெ சமாச "சவலெற்" 1958 மொடல் பெற்றோல் 33 ஸ்ரீ 1706 இலக்கம் கொண்ட லொறியை விற்பனை செய்வதற்குரிய கேள்விப்பத்திரங்களை ஏற்றுக்கொள்வார். கேள்வி வைப்புப் பணமாக ரூபா 25/-ஐயும் சாதனக் கட்டணமாக ரூபா 5/-ஐயும் 15-7-69க்கு முன் ஷெ சமாசக் கந்தோரில் கட்டிப் பற்றுச்சீட்டுப் பெற்ற பின் வழங்கப்படும் படிவத்தில் மாத்திரம் விண்ணப்பித்தல் வேண்டும். கேள்வி வைப்புப் பணம் கேள்வி நிபந்தனைகளுக்கேற்பத் திருப்பிக் கொடுக்கப்படும்.

ஷெ லொறியை 10-7-69ல் தலைமைக்கந்தோர் நீர்வேலியில் பார்வையிடலாம். இத்திகதியில் பார்வையிட வசதியில்லாதவர்கள் நிருவாகக் காரியதரிசியுடன் முன்கூட்டியே ஒழுங்கு செய்து பார்வையிடலாம்.

க. வீ. கனகசபாபதி,
தலைவர்.

வலி — கிழக்கு ப. நோ.
கூ. ச. சமாசம்,
நீர்வேலி,
27-6-69. 1639


வல்வெட்டித்துறை
ரஞ்சனு தியேட்டர்
தினசரி 6-30, 9-30.
பிரிபோயா, போயா காலை 10-30
எம். ஜி ஆர். — ஜெயலலிதா
நடித்த
ஒளிவிளக்கு


## கிராமச் சபைகள் கட்டளைச் சட்டம்
### 17-ம் பிரிவின் படியான அறிவித்தல்

1961ன் 60-ம் இலக்க அதிகாரச் சட்டத்தால் திருத்தப்பட்ட படியான கிராமச் சபைகளின் கட்டளைச் சட்டத்தின் (அத்தியாயம் 257) 17 (1)ம் பிரிவால் எனக்கு உரித்தாக்கப்பட்ட அதிகார பலத்தைக் கொண்டு அன்ரனி அல்பிறற் ஜோசப், உள்ளூராட்சி உதவி ஆணையாளர், யாழ்ப்பாணம் ஆகிய நான் இந்த அட்டவணையில் பத்தி 1-ல் குறிக்கப்பட்டுள்ள கிராமச் சபைகள் ஒவ்வொன்றினதும் முதற் கூட்டத்தை, அந்த அட்டவணையில் பத்தி 2-ல் உள்ள ஏற்ற பதிவில் குறிக்கப்பட்டுள்ள திகதியில், அந்த அட்டவணையின் பத்தி 3-ல் உள்ள ஏற்ற பதிவில் குறிக்கப்பட்டுள்ள நேரத்தில், அந்த அட்டவணையின் பத்தி 4-ல் குறிக்கப்பட்ட இடத்தில் கூட்டுகின்றேன்.

உள்ளூராட்சி அமைச்சு,
யாழ்ப்பாண அலுவலகம்,
யாழ்ப்பாணம். 1969 ஜூலை, 1.

அ. அ. ஜோசப்,
உள்ளூராட்சி உதவி ஆணையாளர்,
யாழ்ப்பாணம்.

அட்டவணை

| பத்தி 1 கிராமச் சபையின் பெயர் | பத்தி 2 திகதி | பத்தி 3 நேரம் | பத்தி 4 இடம் |
|---|---|---|---|
| மல்லாகம் | 11-7-1969 | 9-30 மு. ப. | கிராமச் சபைக் காரியாலயம் மல்லாகம். |
| ஏழாலை | 11-7-1969 | 11-00 மு. ப. | கிராமச் சபைக் காரியாலயம், ஏழாலை. |
| நீர்வேலி | 11-7-1969 | 3-00 பி.ப. | கிராமச் சபைக் காரியாலயம், நீர்வேலி. |
| அனலைதீவு | 12-7-1969 | 10-00 மு. ப. | கிராமச் சபைக் காரியாலயம், அனலைதீவு |
| எழுவைதீவு | 12-7-1969 | 12-30 பி. ப. | கிராமச் சபைக் காரியாலயம், எழுவைதீவு. |
| வேலணை | 14-7-1969 | 9-30 மு. ப. | கிராமச் சபைக் காரியாலயம், வேலணை. |
| நாரந்தனை | 14-7-1969 | 11-00 மு. ப. | கிராமச் சபைக் காரியாலயம், நாரந்தனை. |

GP 3930


உங்கள் சேவைக்காக!

1. வெளிநாடுகளில் கல்வி
2. வெளிநாடுகளில் சுற்றுப்பிரயாணம்
பாஸ்போட் முதல் விமானப்பயணம் வரை எல்லா வசதிகளும் ஒழுங்கு செய்யப்படும்
3. இலங்கையில் சுற்றுப்பிரயாணம்
மிகக்குறைந்த செலவுடன் இலங்கை பூராவும் யாத்திரைச் சுற்றுப்பயணமும் உல்லாசச் சுற்றுப்பயணமும் உங்கள் பண வசதிக்கும்ரசனைக்கும் ஏற்ற ஒழுங்குகள் செய்து தரப்படும்.
உங்கள் எதிர்காலத்தை அறிந்து கொள்ளுங்கள்! முப்பது வருட அனுபவம்பெற்ற எங்கள்கைரேகை நிபுணரைக் கலந்தாலோசியுங்கள்!
சந்திரா சுற்றுப்பயண சேவை
(ஒருங்கிணைக்கப்பட்ட ஸ்தாபனம்)
பிரமன்ஸ் லிமிட்டெட்
(பதிவு செய்யப்பட்ட சீட்டு ஒழுங்காளர்கள்)
தலைமைக் காரியாலயம்
94 1/2, யோர்க்வீதி,
கொழும்பு-1
ரெலிபோன்: 33932.
கிளைக் காரியாலயம்
2-வது மாடி,
சங்கரப்பிள்ளை கட்டடம்:
166, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.
1638


## தமிழ்த்தினவிழா போட்டிகள்

— நமது உரும்பராய் நிருபர் —

கோப்பாய் வட்டாரப் குறித்த விழாக்களை இந்த பாடசாலைகளுக்கான கல்வி மாத நிறைவு ... நூற்றுண்டையொட்டியனர் நடத்தி முடிப்பதென தமிழ்த்தின விழாப் போட் வும் தீர்மானிக்கப்பட்டது

## சிறுவர் பாடசாலை திறப்புவிழா

யாழ்ப்பாணம், சனி

சிறுவர்களின் கல்வி வளர்ச்சியை முன்னிட்டு யாழ்ப்பாணம் கொழும்புத்துறை வீதியில் அமைக்கப்பட்ட கலைவாணிசிறுவர் பாடசாலை இன்று பிற்பகல் திறந்துவைக்கப்படவிருக்கிறது. கோட்டை முனீஸ்வரன் கோவில் அதிபர் திரு. கே. ஜே. இராஜசிங்கத்தின் முயற்சியினால் உருவான இப்பாடசாலைத் திறப்புவிழா திரு. ஏ ரி. துரையப்பா தலைமையில் நிகழும்.

## இன்றைய பலன்

ஆனிமாதம் 21-ம் திகதி
5-7-69

மேஷம்- இன்சொல்லால் இன்று அனைவரையும் கவருவீர். தொழிலிலும் வெற்றியுண்டு. பொருளாதாரத்துறையில் முன்னேற்றம் தென்படும். செல்வாக்கும் பெருகும்.

ரிஷிபம்- அதிக ஆசை அனர்த்தத்தை விளைவிக்கும். கொடுக்கல் வாங்கல், பகைக்கு வழிவகுக்கும். பழைய நினைவுகள் மன அமைதியைக் கெடுக்கும்.

நெல்லியடி மகாவித்தியாலயம்

## வருடாந்த விளையாட்டுப் போட்டி முடிவுகள்

உடுப்பிட்டி, வெள்ளி

நெல்லியடி மத்திய மகா வித்தியாலய வருடாந்த இல்லங்களுக்கு இடையேயான விளையாட்டுப்போட்டிகள் அதிபர் திரு. கே. சிவசிதம்பரம் தலைமையில் நடைபெற்றன.

கம்பன் (மஞ்சள்) இல்லம் 188 புள்ளிகள் பெற்று இவ்வருட சாம்பியனாகியது. இளங்கோ (சிவப்பு) இல்லம் 187 புள்ளிகள் பெற்று இரண்டாமிடத்தையும், வள்ளுவன் (பச்சை) இல்லம் 180 புள்ளிகள் பெற்று மூன்றாமிடத்தையும், பாரதி (நீலம்) இல்லம் 168 புள்ளிகள் பெற்று நான்காமிடத்தும் பெற்றுக்கொண்டன.

சில முடிவுகள் வருமாறு:-

அதிசிரேஷ்ட பிரிவு (பத்து விளையாட்டுக்களில் சிறந்த விளையாட்டுவீரர்கள்) கே. ஸ்ரீதரன், ரீ. சண்முகநாதன், எம். ஆர். அப்துல் முனைப், எம். ஏ. ஹகீட், வீ. இராசையா.

13 வயதுக்குட்பட்டோர் (நீளம் பாய்தல்) ஏ. கே. கிருஷ்ணராசா எம், சிவராசா கே. கிருஷ்ணகுமார், (உயரம் பாய்தல்( கே. பாலசிங்கம், கே. கிருஷ்ணகுமார், கே. ஜெயலிங்கம், (நீளம்பாய்தல்) என். கமலராணி, இராஜலட்சுமி, கே. இந்துமதி. (75 மீட்டர் ஓட்டம்) என். கமலராணி, ரீ. கமலாம்பிகை, ஆர். இதயராணி

14 வயதுக்குட்பட்டோர் (உயரம்பாய்தல்) எஸ். தியாகலிங்கம், என். ஜெகசோதிநாதன், என். சிவசோதி, (நீளம்பாய்தல்) ரீ. ரவீந்திரன், பீ. கிருபானந்தன், வீ. சுந்தரராசா.

15 வயதுக்குட்பட்டோர் (குண்டெறிதல்) எஸ். சந்திரபாலன், எஸ். முருகமூர்த்தி, கே. ஸ்ரீதரன், (உயரம்பாய்தல்) எஸ், இரத்தினகுமார், கே. கிருஷ்ணனந்தன், கே. ஜெயராசா, (நீளம்பாய்தல்) கே. மகேந்திரராசா, கே. கிருஷ்ணனந்தன், கே. கந்தசாமி.

16 வயதுக்குட்பட்டோர் (உயரம் பாய்தல்) என். சிவபாலன், ஆர். சற்குணநாதன் (டிஸ்கஸ் எறிதல்) கே. நிர்மலாதேவி, கே. கௌசல்யாதேவி, ஏ. ராஜேஸ்வரி (நீளம்பாய்தல்) கே. பத்மாசனி, வீ. இளந்தேவி, வீ. புஷ்பராணி (ஜவலின்) கே. கிருஷ்ணமூர்த்தி, என். நித்தியானந்தன், பீ. ராமலிங்கம், (நீளம்பாய்தல்) என். மகேசன், ஆர். அழகரத்தினம், ஆர். சற்குணனந்தன்.

17 வயதுக்குட்பட்டோர் (குண்டெறிதல்) எஸ். செல்வராசா, கே. உவேந்திரன், என். நவரத்தினராசா, (ரிபிள்ஜம்ப்) கே. சிவபாலன், என். யோகேந்திரன் எஸ். பத்மநாதன் (போல்வோட்) எஸ். கருணேஸ்வரன், ரீ. சாந்தமூர்த்தி.

19 வயதுக்குட்பட்டோர் (நீளம் பாய்தல்) வீ. இளவரசி, கே. யோகாம்பிகை, எம். ஜெயந்தி (டிஸ்கஸ் எறிதல்) வீ. இளஞ்செல்வி, வீ. இளவரசி, எம். யசோதராதேவி, (800 மீட்டர் ஓட்டம்) வீ. கனகசபை, கே. சிவசூரியலிங்கம், பீ. நித்தியானந்தன் (ஜவலின்) எம். வித்தியாதரன், எம். கருணாநிதி, வீ. கனகசபை (1500 மைல் ஓட்டம்) வீ. கனகசபை, ஏ. நாகேந்திரம், சிவசூரியலிங்கம், (உயரம் பாய்தல்) கே, குலசேகரம், ஏ. ஆடியபாதம், கே. தங்கவேலாயுதம், (அணிவகுப்பு) வள்ளுவன், கம்பன், பாரதி.

13 வயதுக்குட்பட்ட பெண்கள் சாம்பியன்-பீ. கமலராணி (இளங்கோ) 16 வயதுக்குட்பட்ட பெண்கள் சாம்பியன்-எஸ் சிவாஜினி, வீ. இளவரசி (வள்ளுவன்) பிரிவுச் சாம்பியன்கள். கே. பாலசிங்கம், ரீ. ரவீந்திரன், கே. மகேந்திரராசா. கே. சிவரத்தினம், எஸ். கருணேஸ்வரன், கே. சிவானந்தன்.

## நாவலர் காப்பியம்

யாழ்ப்பாணம், சனி

நாவலர் சிலை திறப்புவிழா, மகாநாடு ஆகியவற்றைத் தொடர்ந்து நாவலர் காப்பியம் ஒன்று இப்போது உருவாகிக்கொண்டிருக்கின்றது. யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி ஆசிரியரான வித்துவான், சைவப் புலவர், கலைமணி, க. கணபதிப்பிள்ளை இதனைக் காப்பியமாக வடிக்கின்றார்.

நாவலர் மகாநாட்டில் வித்வான் க. கி. நடராஜன் தலைமையில் நடைபெற்ற கவியரங்கில் இந்தக் காப்பியத்தின் சில கவிதைகள் அறிமுகம் செய்யப்பட்டன.

அவையடக்கம், சிலை பவனி வரும் படலம், பவனி காண் படலம், நாட்டுப் படலம், நகரப்பகுதிகளிலிருந்து சிலகவிதைகள் இங்கு சமர்ப்பிக்கப்பட்டன. (கா. நி.)

## தீவுப்பகுதியில் விளையாட்டு விழா

அல்லைப்பிட்டி, வெள்ளி

தீவுப்பகுதி பாடசாலைகள் விளையாட்டுச் சங்கத்தின் ஆதரவில் இம்மாதம் 4-ம், 5-ம் திகதிகளில் ஊர்காவற்றுறை புனித அந்தோனியார் கல்லூரி விளையாட்டுத் திடலில் விளையாட்டுப் போட்டியும், விளையாட்டு விழாவும் நடைபெற இருக்கின்றது. இப்போட்டியில் வேலணை மத்திய கல்லூரி, ஊர்காவற்றுறை சென். அன்ரனீஸ் கல்லூரி கரம்பன் சண்முகானந்தா வித்தியாலயம் போன்றபிரபல கல்லூரிகள் பங்குபற்றுகின்றன.

சாதனைகள் (பெண்கள்) டிராக்-எஸ். சிவாஜினி; பீல்ட்-கே. பத்மாசனி (ஆண்கள் டிராக்) வீ. கனகசபை, (பீல்ட்) கே. மகேந்திரராசா.

(அஞ்சலோட்டம்) பாரதி இல்லம், இளங்கோ இல்லம், கம்பன் இல்லம்.


இப்பொழுது நீங்கள் ... புதிய ...
செலவில்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

MANOHARA
JAFFNA
Daily 2, 6 & 10-00 P.M
Yul Brynner
in
TEN
COMMANDMENTS

ரஞ்சனா தியேட்டர்
தினசரி 6-30, 9-30,
பிரிபோயா, போயா காலை 10-30
எம். ஜி ஆர். — ஜெயலலிதா
நடித்த
ஒளிவிளக்கு
(ஈஸ்ட்மென் கலர்)

ராணி
(யாழ்ப்பாணம்)
[தினசரி 3 காட்சிகள்]
ஜெய்சங்கர்
வரலக்ஷ்மி
நடித்த
# உயிரா மானமா

வின்ஸர்
(யாழ்ப்பாணம்)
[தினசரி 4 காட்சிகள்]
✱ சிவாஜி
✱ பத்மினி
நடித்த
# திருமால் பெருமை

3வது வாரம்!
கெப்பிட்டல்
(கொழும்பு)
பிளாஸா
(வெள்ளவத்தை)
விஜயா
(மட்டுநகர்)
ஸ்ரீ கிருஷ்ணா
(திருமலை)
வெலிங்டன்.
(யாழ்ப்பாணம்)
ஆகிய திரைகளில்
ஸ்ரீதரின் கதை, வசனம், டைரக்ஷனில் உருவாகி
★ சிவாஜிகணேசன்
★ கே. ஆர். விஜயா
முத்துராமன்
கீதாஞ்சலி

நடித்த
# நெஞ்சிருக்கும் வரை

இங்ஸ்லி (கொழும்பு)
★ எம். ஜி. ஆர்.
★ சாவித்திரி
நடித்த
தேவரின்
# வேட்டைக்காரன்

— நமது உரும்பராய் நிருபர் —

கோப்பாய் வட்டாரப் பாடசாலைகளுக்கான கல்வி நூற்றாண்டை யொட்டிய தமிழ்த்தின விழாப் போட்டிகள் மிகவும் சிறப்பாக நடைபெறவிருக்கின்றன.

இதற்கான ஒழுங்குகளை யிட்டு நீர்வேலி அத்தியார் இந்துக் கல்லூரியில் நடைபெற்ற ஆலோசனைக் கூட்டத்துக்குத் தலைமைதாங்கிய கோப்பாய் வட்டாரக் கல்வி அதிகாரி திரு. வே. சண்முகநாதன் போட்டிகளைச் சிறப்பாக நடத்துவதற்குரிய வழிவகைகளை விளக்கிக் கூறினர்.

கலைச்சபை, பொருட்காட்சிச்சபை, பேச்சுப்போட்டிச் சபை என மூன்று சபைகள் தெரிவுசெய்யப்பட்டன.

கலைவிழாச்சபை உறுப்பினர்: தலைவர்: திரு. கே. சண்முகநாதன், இணைக்காரியதரிசிகள்: திரு. க. மார்க்கண்டு, திரு. சி. கந்தசாமி.

பொருட் காட்சிச் சபை உறுப்பினர்: தலைவர்; பிரமஸ்ரீ சி. ஸ்ரீநிவாசன், காரியதரிசி: திரு. வை. தனேஸ்வரன்.

பேச்சுப் போட்டிச்சபை உறுப்பினர்: தலைவர்: பண்டிதர் செ. துரைசிங்கம், காரியதரிசி: திரு. அ. பஞ்சாட்சரம்.

குறித்த விழாக்களை இந்த மாத நடுப் பகுதிக்கு முன்னர் நடத்தி முடிப்பதெனவும் தீர்மானிக்கப்பட்டது.

## இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம்

344 மீ அன் 61 மீ

காலை 6-30 நாதாஞ்சலி, 6-35 சைவ நற்சிந்தனை, 6-40 கிறிஸ்தவ நற்சிந்தனை, 7-15 துதிப்பாடல்கள், 7-30 திரைகானம், 8-00 செய்திச் சுருக்கம், 8-03 நிலையஒலிப்பதிவுகள், 8-15 இஸ்லாமியகீதங்கள், 8-30 செய்திச்சுருக்கம்.

344 மீ அன் 49 மீ

பகல் 12-00 செய்திச் சுருக்கம், 12-03 திரைகானம், 1-00 மாணவர்மன்றம், 1-30 செய்திச்சுருக்கம்.

344 மீ அன் 61 மீ

மாலை 4-25 செய்திச்சுருக்கம், 4-28 கல்விஒலிபரப்பு, 5-00 செய்திச் சுருக்கம், 5-03 பிறந்ததினவாழ்த்துக்கள், 5-15 ஓடிவிளையாடு பாப்பா, 5-45 படத்திலிருந்து.

இரவு 6-15 இசைப்பயிற்சி, 6-30 கிராமசஞ்சிகை, 7-00 செய்திச் சுருக்கம், 7-03 வயலின்இசை, 7-35 வானொலி குறுக்கெழுத்துப் போட்டி, 8-00 செய்திச் சுருக்கம், 8-03 முஸ்லிம் நிகழ்ச்சி, 9-15 புல்லாங்குழல், 9-30 நாடகம், 10-15 நேயர்கேட்டவை, 10-30 செய்திச்சுருக்கம்.

இன்று மட்டும்
வெஸ்லி சினிமா
மானிப்பாய்
தினசரி 6-30, இரவு 10-00
பிரிபோயா, போயா 2-30 மணி
எஸ்.எஸ்.ஆர்-விஜயகுமாரி
நடித்த
காக்கும் கரங்கள்

## இன்று முதல் குதூகல ஆரம்பம்!

எஸ். ரி. ஆர். பிலிம்ஸ்
பெருமகிழ்ச்சியுடன் அளிக்கும் மாபெரும்
தீந்தமிழ் திரைவிருந்து
ராஜா யாழ்ப்பாணம்
தினசரி பிற்பகல் 2-30 மணி, 6-30 மணி,
இரவு 9-45 மணிக்கும் போயாவுக்கு முன்தினம்
போயாதினம் காலை 10-30 மணி.
பத்மினி ★ பேபிராணி ★ மனோகர்
சுந்தரராஜன் ★ கே. ஏ தங்கவேலு
டி. கே. பகவதி — தேங்காய் சீனிவாசன்
நடித்தது
விஜயா சுரேஷ் கம்பைன்ஸ
# குழந்தைக்காக
கதை-வசனம் துறையூர் மூர்த்தி பாடல்கள் கவிஞர் கண்ணதாசன்

அனர்த்தத்தை விளைவிக்கும். கொடுக்கல் வாங்கல், பகைக்கு வழிவகுக்கும். பழைய நினைவுகள் மன அமைதியைக் கெடுக்கும்.

மிதுனம்- கல்வியில் தனியார்வம் பிறக்கும். ஆசிரியர்களாயின் தொழில் சிறக்கும். ஆக்கப்பணிகளில் ஈடுபடுவீர்கள். நேர்முகப் பரீட்சைக்கு நல்லநாள்.

கடகம்- சுற்றுடலில் புதியஉற்சாகம் ஏற்படும். உள்ளத்தில் தோன்றும் உறுதி உங்களை முன்னணிக்கு அழைத்துச் செல்லும் கண்ணியமான தினம்.

சிம்மம்-நெருங்கிய நண்பர் ஒருவருடன் பகைத்துக்கொள்ளுவீர். அடுத்துக்கெடுப்பதற்குப் பலர் காத்திருப்பர். மற்றவர்கள் பேச்சை நம்பவேண்டாம்.

கன்னி- காதலர்களுக்குக் கன குஷியானதினம். பெற்றோர்களின் ஆதரவு கிடைக்கும். இல்லத்தில் இனிமையான சம்பவங்கள் இடம்பெறும். இன்று சுபதினம்.

துலாம்- அவதூறான பேச்சுக்களுக்கு இடமிருக்கும். ஆத்திரம் அதிகரிக்கும். கடமையில் தடைகள் ஏற்படும். சிநேகிதர்களால்தொல்லையுண்டு.

விருச்சிகம்- பெரியவர் ஒருவரின் ஆதரவு கிடைக்கும். தெய்வத்தின் அருளுமுண்டு. இலட்சியப்பாதையில் புதிய முன்னேற்றம் காணப்படும்.


தனுசு- புதிய வேலை வாய்ப்புக்கள் கிடைக்கும். சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தினல் இன்று துரித முன்னேற்றம் கிடைக்கும். சிலருக்கு அதிர்ஷ்டலாபமுமுண்டு.

மகரம்- விவசாயிகள் வாழ்க்கையில் நல்ல திருப்பம் ஏற்படும். எதிர்பார்த்த கடன் கிடைக்கும் சிலருக்கு அரசினர் ஆதரவும் உண்டு.

கும்பம்- குறுக்குவழியில் இறங்குவதால் சட்டத்தின் பிடியில் மாட்டிக்கொள்ளக்கூடும். திரைமறைவில் உங்கள் நடவடிக்கைகள் கண்காணிக்கப்படும்.

மீனம்- அவசர முடிவினல் அரிய சந்தர்ப்பத்தை இழக்கக்கூடும். ஆத்திரம் வழக்குவிவகாரங்களில் ஈடுபடச் செய்யும். பூமிப் பிணக்கைத் தவிர்க்கவும்

— சோதிடக்கலாநிதி —
திருமலை
க. வேலுப்பிள்ளை

நீங்களும் நாகம் பூசிய இரும்புத்தகரங்களை பாவிக்கலாம்.....
குறைந்த செலவில் கூரையிடுவதற்கும் மூடுவதற்கும்.


# ரிவர் பிராண்ட்
நாகம் பூசிய தகரங்கள்

குறைந்த செலவில் கூரையிடுவதற்கும், மூடுவதற்கும் நாகம் பூசிய தகரங்களையே நாடுங்கள்.

ஆற்றுக்குறியுடைய, நெளிவுள்ள நாகம் பூசிய தகரங்கள், விரும்பத்தக்க மானிகளில் இலங்கையில் தயாரிக்கப்படுகின்றன. பிரபல்யமான எல்லா இரும்புக் கடைகளிலும் இத்தகரங்களை உடனே பெற்றுக்கொள்ளலாம்.

24, 26, 28 மானியுள்ளவை

பல்வேறு பாவனைகளுக்குப் பயன்படுத்தப்படுகின்றன. இவை குறிப்பாக தேயிலை, இறப்பர் தொழிற்சாலைகட்கும், உணவுக்களஞ்சியங்கட்கும், பண்டகசாலைகட்கும், கிடங்குகட்கும் உகந்ததாகும்.

24, 26, 28 மானியுள்ளவை

கோழி வளர்ப்பவர்கட்கும், சிறிய கைத்தொழிலுக்கும், விவசாயிகளுக்கும், ஏனையோருக்கும் உகந்ததாகும்.

கூடிய நன்மைகள் ஐந்து. சிக்கனமானது. நீண்டகாலம் பாவிக்கக் கூடியது. இலகுவாக நிறுவக் கூடியது. தீ பிடித்தலையும், கால நிலைச் சேதத்தையும் தடுக்க வல்லது. குறைந்த செலவில் பராமரிக்கக் கூடியது.

# ரிவர் பிராண்ட்
தயாரிப்பாளர்:
## இலங்கை கல்வனைசிங் இன்டஸ்ரீஸ் லிமிட்.

தொழிற்சாலை:
லேடி கத்தரீன் தோட்ட வீதி, இரத்துமலானை.
தொலைபேசி. (71) 7987

கொழும்பு அலுவலகம்:
450, பழைய சோனக தெரு, கொழும்பு 12.
தொலைபேசி: 33143

GI4-69-MA...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தெலிங்கானு ராஜ்ய அமைப்புக்கு காங்கிரஸ் கட்சி கைவிரிப்பு

## மொழிவாரி பிரிவினைகளுக்கு முற்றுப்புள்ளி வைக்க யோசனை

புதுடில்லி, ஜூலை 4

மொழிவாரி ராஜ்யங்களை மேலும் பிரிவினைக்குள்ளாக்குவதில்லை யென்று காங்கிரஸ் கட்சியின் ஆட்சிமன்றக் குழுமுடிவு செய்திருக்கின்றது.

தெலிங்கான ராஜ்யக் கோரிக்கை பற்றி நேற்று காங்கிரஸ் ஆட்சிமன்றக் குழு சுமார் ஒருமணி நேரம் விவாதம் நடத்தியது.

ஆட்சிமன்றக் குழுவின் விவாதத்தின் பின்னர் காங்கிரஸ் தலைவர் திரு. நிஜலிங்கப்பா அறிக்கையொன்றை வெளியிட்டார்.

ஆந்திர பிரதேச முதல்வர் திரு. பிரம்மானந்த ரெட்டியின் ராஜினமா பற்றியும் காங்கிரஸ் குழு ஆலோசனை செய்தது இநதப் பிரச்னையை ஆராய்ந்து முடிவு செய்வதை ஆந்திர பிரதேசக் காங்கிரஸ் கட்சிக் குழுவிடமே விட்டுவிடுவதென்று குழு தீர்மானித்தது. ஆந்திர பிரதேசக் காங்கிரஸ் கமிட்டியின் கூட்டம் ஞாயிற்றுக்கிழமை ஹைதராபாத்தில் நடைபெறவிருக்கின்றது. அந்தக் கூட்டத்தில் திரு. நிஜலிங்கப்பாவும் திரு. காமராஜரும் கலந்து கொள்வார்கள். காங்கிரஸ் ஆட்சிமன்றக் குழுவின் சார்பில் ஆலோசனைகளைத் தெரிவிக்க தங்களுக்குப் பூரண அதிகாரம் வழங்கப்பட்டிருப்பதாக திரு. நிஜலிங்கப்பா கூறினர்.

ஆந்திரப் பிரதேச மக்களை அமைதியைப் பராமரிக்கும் படியும் காங்கிரஸ் ஆட்சிமன்றக்குழு கேட்டுக் கொண்டுள்ளது.

பீகார் ராஜ்ய நிலைமை குறித்தும் காங்கிரஸ் ஆட்சிமன்றக்குழு ஆலோசனைகள் நடத்தியது முடிவுகள் எதுவும் உடனடியாகத் தெரியவில்லை. என்ருலும் பீகாரில் ஜனதிபதி ஆட்சியைக் கொண்டுவர வேண்டும் என்று ராஜ்ய கவர்னர் தெரிவித்துள்ள சிபார்சு ஏற்றுக் கொள்ளப்படலாமென்று எதிர்பார்க்கப்படுகின்றது.

ஜெருசலத்தில்

## இஸ்ரேல் நடவடிக்கைகளை வன்மையாகக்கண்டிக்ககோரிக்கை

### பாதுகாப்பு சபைக்கு வரும் தீர்மானம்

நியுயோர்க், ஜூலை 4

ஜெருசலத்தில் இஸ்ரேல் மேற்கொண்டுள்ள நடவடிக்கைகளைக் கடுமையாகக் கண்டிக்கவேண்டும் என்று ஐ. நா. பாதுகாப்புச் சபையைக் கேட்டுக்கொள்ளும் தீர்மானம் ஒன்றைஆசிய ஆபிரிக்க நாடுகள் தாக்கல்செய்துள்ளன.

இஸ்ரேலுக்குப் பொருளாதார உதவிகள் அளிப்பதை மற்ற நாடுகள் நிறுத்திவிடவேண்டுமென்று வற்புறுத்துவதாக அமைந்த முந்திய தீர்மானத்துக்கு ஒரு திருத்தமாக இந்தப் புதிய தீர்மானம் தாக்கல்செய்யப்பட்டிருக்கின்றது.

பகுதிகளில் இஸ்ரேலியர் அரபுச்சுவடுகளே இல்லாது செய்துவிடும் நடவடிக்கைகளில் ஈடுபட்டிருப்பதாகக் குற்றஞ்சாட்டப்படுகிறது.

இஸ்ரேலை, படைபலம் உபயோகித்து வழிக்குச் கொண்டுவரவேண்டும் என்றும், பொருளாதார நெருக்கடிகளை ஏற்படுத்தவேண்டும் என்றும் பாகிஸ்தான், செனிகல், ஸாம்பியா ஆகிய நாடுகள் சமர்ப்பித்துள்ள தீர்மானம் வற்புறுத்துகிறது.

பாதுகாப்புச்சபை இது விஷயமாக ஆலோசிப்பதற்கு விரைவில் கூடவேண்டுமென்றும் வற்புறுத்தப்பட்டுள்ளது. இத்தீர்மானம்

## இந்திராவின் இரகசியம்

ஜாகர்த்தா, ஜூலை 4

திருமதி இந்திரா காந்தி இவ்வளவு வெற்றிகரமான மாதாகத் திகழ்வதன் இரகசியத்தை அவரே இப்படிக் கூறினர்:-

''என்னுடைய ரகசியங்களையெல்லாம் வெளியிடச் சொல்கிருர்கள். நான் என்னை ஒரு மாதாகக்கருதிக்கொள்வதில்லை. ஒரு மனிதப்பிறவியென்றும் மக்களின் சேமத்தில் அதிக அக்கறை கொண்ட ஓர் இந்தியரென்றும்நினைத்துக்கொள்

## திருமலைச் செய்திகள்

### வரவேற்பு

கிண்ணியாவில் பிரபல இஸ்லாமியத் தொண்டரும் கொடைவள்ளலுமான அல்ஹாஜ் எம் ஐ எம். நளீமுக்கு சென்ற வெள்ளிக்கிழமை 27-ந் திகதியன்று மதுரஸதுல்றெமுளான் அரபிக்கல்லூரியின் நிர்வாகசபை வரவேற்பொன்றை அளித்தது. நாட்டின் பல பாகங்களிலும் இவரது நன்கொடையைப் பெற்ற அரபிக்கல்லூரிகள் இயங்கி வருவதுகுறிப்பிடத்தக்கது.

0 0 0

### மார்க்க ஞானப் பரீட்சை

வருடாவருடம் நடைபெற்று வரும் என். ஏ. சி. (நத்துவில் அன்ஸாருல் கமிட்டி)யின் மார்க்க ஞானப் பரீட்சை கிண்ணியாவில் ''ஹாதிமுல் மலிக்குத்தாயிம்'' மதரஸாவில் நடைபெற்றது. இப்பரீட்சையில் கூடிய புள்ளிகளைப் பெற்ற முதல் மூவருக்குப் பெறுமதியான பரிசில்கள் வழங்கப்படவிருக்கின்றன.

0 0 0

### அரங்கேற்றினர்

ஆலங்கேணி மறுமலர்ச்சி நாடகமன்றத்தினர் ''என்ர மகன் டாக்குத்தர்'' என்ற சமூக நாடகத்தை அரங்கேற்றியுள்ளனர். இதன் கதைவசனத்தை மு. வே. யோகேஸ்வரன் எழுதியுள்ளார்.

0 0 0

### சாம்பியனுனது

தோப்பூர் முஸ்லிம் மகா வித்தியாலயத்தில் இல்லங்களுக்கிடையேயான விளையாட்டுப்போட்டி ஒன்று நடைபெற்றது. இப்போட்டியில் மதீனு (பச்சை) இல்லம் சாம்பியனுனது

நிகழ்ச்சிகளில் கூடுதலான புள்ளிகளைப் பெற்று பின்வருவோர் சாம்பியன்களாகத் தெரிவு செய்யப்

சாரதி ஒருவரின் சாதனை!

## பிரயாணிகள் நடு வீதியில்; கிளீனர் ஆஸ்பத்திரியில்

யாழ்ப்பாணம், சனி

வானில் பிரயாணம் செய்த 15 பிரயாணிகளையும் தனது 'கடுகதி' ஓட்டத்திஞல் கதிகலங்கச் செய்து வழியிலேயேஇறங்கச்செய்த வான் சாரதி ஒருவர் இறுதியில் தனது சகபாடியான கிளீனரையே விபத்தில் சிக்கச் செய்தாராம். இதனுல் காயத்துக்குள்ளான கிளீனர் இப்போது யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார்

இத்தனைக்கும் காரணம் குறிப்பிட்ட வான்சாரதி மதுபோதையில் வாகனத்தைச் செலுத்தியதுதான் என்று பொலிஸ் விசாரணையில் தெரியவந்துள்ளதாம்.

கீரிமலையிலிருந்து நெல்லியடிக்குச் சென்ற இவ்வானுக்கு ஏற்பட்ட விபத்து பற்றி பின்வரும் தகவல்கள் பொலிஸ் விசாரணையில்தெரிவிக்கப்பட்டன.

வானின் அசுரவேகத்தைத் தாக்குப்பிடிக்க முடியாத பிரயாணிகள் வழியிலேயே இறங்கிவிட்டார்கள். கிளீனருடன் மட்டுமே வான் நெல்லியடி நோக்கிச்சென்று கொண்டிருந்தது. கிளீனரான ஆழ்வார் தியாகு வானுக்குள் நித்திரையாகிவிட்டார். கட்டுப்படுத்த முடியாத நிலையில் ஓடிக்கொண்டிருந்த வான் வல்வெட்டித் துறையில் திடீரென மரம் ஒன்றில் மோதி நின்றதாகவும், இதனுல் கிளீனரான தியாகு படுகாயம் அடைந்ததாகவும் தெரிவிக்கப்பட்டது.

பொலஸ்ஸார் மேலும் விசாரணையில் ஈடுபட்டுள்ளனர். (கா.நி)

## திருவள்ளுவருக்குசிலை அமைக்க தீர்மானம்

அல்லைப்பிட்டி, வெள்ளி

அகில இலங்கை இந்து மத துறவிகள் திருக்கூட்டத்தினர் தங்களது பதினெட்டாவது ஆண்டுக்கான பின்வரும் தீர்மானங்களை நிறைவேற்றியுள்ளனர்.

1. இலங்கையிலுள்ள சைவமக்கள் தெய்வ வழிபாட்டில் நம்பிக்கை குறைந்து மனிதாபிமானத்தின் பெருமையை மதியாது பலவேற்றுமைகளால் கலகமும், துன்பமும், வறுமையும் மிஞ்ச மகிழ்ச்சியின்றி ஒற்றுமை குலைந்து வாழும் இக்காலத்தில் மக்கள்நல்வாழ்வு வாழத் திருக்கூட்டத்தார் அயராது உழைப்பது,

2. தெய்வ வழிபாட்டிற்காக திறக்கப்படாதிருக்கும் ஆலயங்கள்திறக்கப்படவும், தீண்டாமை, மூடப்பழக்கம், மதம்மாறல் என்பனவற்றிலிருந்து மக்கள் மனதை தீவிர பிரசாரத்திஞல் மனமாற்றுதல்.

3. திருவள்ளுவரின் 2000 ஆண்டு வருட ஞாபகார்த்தமாக வள்ளுவரின் திருவுருவத்தை வெண்கலத்திஞல் செய்து அச்சிலையை இலங்கை பூராவும் ஊர்வலமாகஎடுத்து செல்லுவதென்றும்மூன்றுநாட்களுக்குபெரு விழா நடத்துவதென்றும் தீர்மானிக்கப்பட்டது.

## 14-ம் திகதி அரசாங்க

## நல்வாழ்வின் வழிகாட்டிகள் ஆசிரியர்கள்

பொகவந்தலாவை, வெள்ளி

''நன்றி மறப்பது நன்றன்று என்ற உண்மையை எத்தனையோ நூற்ருண்டுகளுக்குமுன்பு கண்டறிந்து கொண்டவர்கள் தமிழர்கள் உலகம் உய்வதற்கு நன்றியொன்றுதான் அடிப்படையாய்உள்ளது. நன்மைசெய்தவர்களுக்கு நாம் நன்றி செய்வது நமது கடமையாகும் எனவே மற்றவர்களை முன்னேற்றமடையச்செய்து நல்வாழ்வின் வழிகாட்டிகளாகத் திகழும் ஆசிரியர்களில் ஒருவரான திரு. ம. மரியாம்பிள்ளைக்கு நாம் நன்றியறிதலைத்தெரிவிப்பது நமது கடமையாகும்''

பொகவந்தலாவ சென். மேரிஸ் பாடசாலையில் தலைமையாசிரியராகக் கடமையாற்றி மன்ஞருக்கு மாற்றலாகிச்செல்லும் தலைமையாசிரியர் திரு. மரியாம்பிள்ளைக்கு அளிக்கப்பட்ட பிரிவுபசார விழாவில் மேற்படி பாடசாலையின் அதிபர் திரு. ஏ. ஆர். சுப்பிரமணியம் இவ்வாறு தெரிவித்தார்.

''மாணவர்களுக்கும் ஆசிரியர்களுக்கும் போதனையால்மட்டுமன்றி சாதனையாலும் முன்மாதிரியாக விளங்கியவர் தலைமையாசிரியர்'' என்று ஆசிரியர் திரு. ஏ. வைத்திலிங்கம் குறிப்பிட்டார்.

தமக்களிக்கப்பட்ட உபசாரத்துக்கு நன்றி தெரிவித்துப்பேசிய திரு. மரியாம்பிள்ளை, ஆசிரியர்கள் அனைவரும் யாதும் ஊரே யாவரும் கேளிர் என்ற மனப்பான்மையுடன் நடந்து கடமையாற்ற முன்வர வேண்டும் என்று குறிப்பிட்டார். ......

## சர்வதேசகூட்டுறவு தினவிழா

கொழும்பு, சனி

நாடுபூராவும் இவ்வருட சர்வதேச கூட்டுறவுதினவிழா இன்று கொண்டாடப்படும்.

கண்டியில் கொண்டாடப்படவிருக்கும் இத்தேசிய வைபவத்தில் மகாதேசாதிபதியும் விவசாய உணவு அமைச்சரும் கலந்துகொள்வர்.

மாவட்ட ரீதியில் கொண்டாடப்படும் இவ்விழாக்களில். கூட்டுறவு விவசாய அடிப்படையில், ஊர்வலங்கள், கூட்டங்கள், போட்டிப் பரிசுகள், களியாட்ட வைபவங்கள் ஆகியன இடம்பெறும்.

அங்கத்தவர்களின் அபிலாஷையைத் தூண்டக்கூடிய பிரச்சாரக் கூட்டங்களை நடாத்தி, தனிப்பட்ட கூட்டுறவு சங்கங்களும், விழா நடாத்தும். இதுசம்பந்தமாக மும்மொழிகளிலும் வானொலி நிகழ்ச்சிகள் ஒலிபரப்பப்படும்.

நாளை கண்டியில் களியாட்டங்கள், பொதுக்கூட்டங்கள் நடாத்துவதன் மூலம் வைபவங்கள் கொண்டாடப்படும். கூட்டுறவு ஸ்தாபனங்களின் பிரதிநிதிகள், விவசாயிகள், பாடசாலை மாணவர்கள் முதலியோரின் அணிவகுப்போடு கூட்டுறவு இயக்கங்களின் விளம்பரச் சின்னங்கள், நாட்டியங்கள் மேளதாளம் ஆகியன கொண்ட கோலாகலமான ஊர்வலம் ஒன்று காலை 8 மணியளவில் தலதா மாளிகை மைதானத்திலிருந்து புறப்பட்டு முற்பகல் 10 மணியளவில் போகம்பரை மைதானத்தை வந்தடையும். இங்கு மகாதேசாதிபதியின் தலைமையில் ஓர் பொதுக்கூட்டம் நடைபெறும். கண்டி மேயர், நிதி அமைச்சர், விவசாய உணவு அமைச்சர், கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளர், இலங்கைக்கூட்டுறவுக் கழகத் தலைவர் ஆகியோர் உரைநிகழ்த்துவர்.

## ஐவர் கைது

கோப்பாய், வெள்ளி

கடந்த சில காலமாக கோண்டாவில் பகுதியில் நடைபெற்றுவரும் பசுத் திருட்டுகள் சம்பந்தமான புகாரையடுத்து எடுத்த நடவடிக்கையின் பயனுக கோப்பாய் பொலிசார் கோண்டாவிலில் வைத்து ஐவர் கொண்ட கோஷ்டியொன்றைக் கைதுசெய்துள்ளனர்.

## கலைவாணி சிலை பூர்த்தி

யாழ்ப்பாணம், சனி

யாழ்ப்பாண பொதுசன நூல் நிலையத்தில் நிறுவப்பட விருக்கும், கலைவாணி சிலை வேலைகள் பூர்த்தியடைந்து விட்டதாக தெரியவருகிறது.

இச்சிலை திறப்பு விழாவில், சகல மதத்தலைவர்களும் கலந்து கொள்வார்களென்றும், தெரியவருகிறது.

'ஈழநாடு'

[11]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேண்டுமென்று வற்புறுத்துவதாக அமைந்த முந்திய தீர்மானத்துக்கு ஒரு திருத்தமாக இந்தப் புதிய தீர்மானம் தாக்கல்செய்யப்பட்டிருக்கின்றது.

1967ம் ஆண்டு யுத்தத்தின்போது இஸ்ரேல் பிடித்துக்கொண்ட ஜெருசலப் மாணம் வற்புறுத்துகிறது.

பாதுகாப்புச்சபை இது விஷயமாக ஆலோசிப்பதற்கு விரைவில் கூடவேண்டுமென்றும் வற்புறுத்தப்பட்டுள்ளது. இத்தீர்மானம் மீது விவாதம் நடத்த இதர நாடுகளும் இணங்கியிருப்பதாகத் தெரிகிறது.

# மாஸ்கோவில் கொழும்பு மாநகர தூதுக்குழு

மாஸ்கோ, ஜூலை 4

''நீங்கள் பிரமாண்டமான வீட்டு நிர்மாணத் திட்டங்களை நிறைவேற்றி வருகிறீர்கள். எங்களின் வீட்டுப் பிரச்னைகளுக்குத் தீர்வுகாண உங்களுடன் நெருங்கிய உறவுகொள்ள நாம் விரும்புகிறோம்'' என்று கொழும்பு மாநகர சபை மேயர் ஜனுப் ஜபீர் ஏ. காதர் கூறினார்.

இங்கு வந்துள்ள கொழும்புமாநகர சபையின் தூதுக் குழுவுக்கு மேயர் தலைமை வகிக்கிறார். தூதுக் குழுவினர் மாஸ்கோ நகர சோவியத்தின் செயற்குழுவுக்கு விஜயம் செய்தனர்.

அதிகாரிகளை செயற்குழுவின் முதலாவது உபதலைவர் வஸிலி இஸயேவ் வரவேற்றார்.

இலங்கைத் தலைநகரின் மாநகரசபைத் தூதுக்குழு மாஸ்கோவுக்கு விஜயம் செய்துள்ளது இதுவே முதல் தடவையாகும். இவர்கள் மாஸ்கோ நகர சோவியத்தின் பணிகளுடன் பரிச்சயம் ஏற்படுத்திக்கொள்வர் இவர்கள் வீட்டு நிர்மாணஸ்தலங்களுக்கும் விஜயம்செய்வர்.

## ரஷ்யாவில் ஆபிரிக்க-ஆசிய எழுத்தாளர்கள்

மாஸ்கோ, ஜூலை 4

மாஸ்கோவில் நடந்த ஆசிய-ஆபிரிக்க எழுத்தாளர் சங்கத்தினது சஞ்சிகையின் ஆசிரியர் குழுக்கூட்டத்தில் கலந்துகொண்ட எழுத்தாளர்கள் சோவியத்யூனியனில் சுற்றுலாவை மேற்கொண்டுள்ளனர். இவர்கள் கஸக்ஸ்தான், 'தாஷ்கந்திற்கும்(உஸ்பெக்கிஸ்தான்) விஜயம்செய்வார்கள்.

கூட்டத்தில் ஐ. அ. கு. அல்ஜீரியா, இந்தியா, லெபனன், மொங்கோலியா, சோவியத் யூனியன், தென் ஆபிரிக்கா, ஜப்பான் ஆகிய நாடுகளின் பிரபல எழுத்தாளர்கள் கலந்துகொண்டனர். சஞ்சிகைக்குத் 'தாமரை' என்று பெயரிட இவர்கள் தீர்மானித்தனர். இச்சஞ்சிகை வருடத்திற்கு நான்கு தடவைகள் அராபிக் ஆஞ்கிலம், பிரெஞ்சு மொழிகளில் வெளியிடப்படும். ஆசிய-ஆபிரிக்க எழுத்தாளர்களின் இலக்கியப்படைப்புகளுடன் இது வாசகர்களுக்குப் பரிச்சயத்தை ஏற்படுத்தும். ஆசிய, ஆபிரிக்க மக்களின் வாழ்வைச் சித்தரிக்கும் படைப்புகளும், விடுதலைப் போராட்டத்தையும் முன்னேற்றத்துக்கான போராட்டத்தையும் சித்தரிக்கும் இலக்கியப்படைப்புகளும் இதில் இடம்பெறும்.

வியட்னும் மக்களின் வீரப் போராட்டத்திற்கும், அரபு மக்களின் போராட்டத்திற்கும் 'தாமரை'யின் விசேஷ இதழ் ஒன்றை அர்ப்பணிப்பதென ஆசிரியர் குழு தீர்மானித்தது.

## நிக்ஸன் நம்பிக்கை

ஜெனீவா, ஜூலை 4

கடல் பிராந்தியங்களில் அணு ஆயுதங்களைக் கட்டுப்படுத்துவதற்கான ஓர் ஒப்பந்தம் சோவியத் யூனியனுக்கும் அமெரிக்காவுக்குமிடையில் விரைவில் ஏற்பட்டுவிடுமென்று அதிபர் நிக்ஸன் நம்பிக்கை தெரிவித்திருக்கிறார்.

ஜெனிவாவில் நடைபெறும் ஆயுதக் குறைப்பு மகாநாட்டுக்கு அவர் அனுப்பியுள்ள செய்தியில் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

## செக். மக்களுக்கு எச்சரிக்கை

பிராக், ஜூலை 4

செக்கோஸ்லவாக்கிய கம்யூனிஸ்ட் கட்சியின் தலைவர் டாக்டர் ஹுசாக் நாட்டில் ஆர்ப்பாட்டங்களில் ஈடுபடுகிறவர்களுக்கு கடுமையான எச்சரிக்கை விடுத்திருக்கிறார்.

சோவியத்யூனியன் தலைமையில் வார்ஸோ ஒப்பந்த நாடுகளின் படைகள் செக்கோஸ்லவாக்கியாவில் ஆக்கிரமிப்பு நடத்தியதினம் அடுத்த மாதம் வருகின்றது. அப்பொழுது ஆர்ப்பாட்டங்களில் எவரும் ஈடுபட்டால் கடும் தண்டனைகளுக்குள்ளாவர் என்று எச்சரிக்கப்பட்டுள்ளது.

என்னை ஒரு மாதாகக்கருதிக்கொள்வதில்லை. ஒரு மனிதப்பிறவியென்றும் மக்களின் சேமத்தில் அதிக அக்கறை கொண்ட ஓர் இந்தியரென்றும்நினைத்துக்கொள்கிறேன்''

உங்கள் வெற்றியின் ரகசியம் என்னவென்று கேட்டபோது அவர் சிரித்துக்கொண்டே மேற்கண்டவாறு கூறினார்.

## கருணாநிதி எச்சரிக்கை

சென்னை, ஜூலை 4

குடியானவர்களைமிராசுதார்களுக்கு எதிராகத் தூண்டிவிட்டு கலவரம் விளைவிக்க முயற்சி செய்தால் மார்க்ஸீய வாதிகள் மீது கடுமையாக நடவடிக்கைகளை எடுக்க நேரும் என்று தமிழ்நாடு முதலமைச்சர் திரு. கருணாநிதி எச்சரிக்கை விடுத்துள்ளார்.

......

## அந்தமானில் ரஷ்ய தளம்? இந்தியா மறுப்பு

புதுடில்லி, ஜூலை 4

அந்தமான்தீவுகளில்ராணுவத் தளங்களை அமைக்க சோவியத் யூனியனுக்கு இந்தியா அனுமதியளித்திருப்பதாக நியூயோர்க்கில் வெளியான செய்திகளில் ஆதாரம் எதுவுமில்லையென்றுஇந்திய அதிகாரிகள் மறுத்துள்ளனர்.

......

## மே.ஜெர்மனிக்கு தேசாய் விஜயம்

புதுடில்லி, ஜூலை. 4

இந்தியத்துணை பிரதமர் திரு. மொரார்ஜி தேசாய் மேற்குஜெர்மனிக்கு விஜயம் செய்வதற்காக இன்று இங்கிருந்து புறப்பட்டுச் சென்றார். மேற்கு ஜெர்மனியின் பிரதமர் கீசிங்கர், அதிபர் திரு. ஹைமன் முதலியவர்களை அவர் அங்கு சந்திக்கவிருக்கிறார்.

......

## கல்விப் பொருட்காட்சி

கோப்பாய், வெள்ளி

கோப்பாய் நாவலர் தமிழ்க்கலவன் பாடசாலையில் இம்மாதம் 11-ந் திகதி கல்விப் பொருட்காட்சி ஒன்றை நடாத்துவதற்கு மேற்படி பாடசாலை அதிபரும் ஆசிரியர்களும் ஏற்பாடுகளை மேற்கொண்டுள்ளனர். பொருட்காட்சிப் பொறுப்பாளர்களாக ஆசிரியைகள் ஆர். எஸ். துரைராசா, வே. இரத்தினம், கே. சரஸ்வதி ஆகியோர் நியமிக்கப்பட்டுள்ளனர்.

போட்டியில் மதீனா (பச்சை) இல்லம் சாம்பியனானது

நிகழ்ச்சிகளில் கூடுதலான புள்ளிகளைப் பெற்று பின்வருவோர் சாம்பியன்களாகத் தெரிவு செய்யப்பட்டனர்.

19 வயதுக்குக் கீழ் செல்வன் ஏ. எம். மரைக்காயர் (மதினா இல்லம்).

16 வயதுக்குக் கீழ் செல்வன் எஸ். எம். றெசீன் (மதீனா இல்லம்)

13 வயதுக்குக் கீழ் செல்வன் ஏ. கயாத்துமீன் (மக்கா இல்லம்)

இல்ல அலங்காரத்தில் மதீனா இல்லம் வெற்றியீட்டியது.

0 0 0

### கி. ச. வேண்டுதல்

தோப்பூர் கிராமசபை எல்லைக்குள் சிறுவர் பூங்கா விளையாட்டு மைதானம் என்பவற்றை அமைக்க தோப்பூர் கிராமசபை நடவடிக்கை எடுத்து வருகின்றது. இதற்கு நன்கொடை வழங்கும்படி உள்ளூராட்சி அமைச்சிடம் கிராமசபை வேண்டியுள்ளது.

## வெள்ளி விழா

சுன்னாகம், வெள்ளி

வலிவடக்கு பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களின் சமாச வெள்ளி விழாவும் கூட்டுறவாளர் தினவிழாவும் நாளை தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரிமண்டபத்தில் நடைபெறவிருக்கிறது.

இவ் விழாவில் வட பகுதி ஐக்கிய மேற்பார்வை சபைத்தலைவர் திரு. இராசரத்தினம், டாக்டர் சு. வே. சீனிவாசகம் உதவிஅரசாங்க அதிபர் தி. முருகேசம்பிள்ளை வலி வடக்கு காரியாதிகாரி பீ. எல். பற்றிக் உட்பட பலர் சொற்பொழிவாற்றுவார்கள். இசை நிகழ்ச்சிகளும் இவ்விழாவில் இடம் பெறும்

## கத்திக் குத்தினல் படுகாயம்

யாழ்ப்பாணம், சனி

சாவகச்சேரியில் நடைபெற்ற கத்திக்குத்துச் சம்பவம் ஒன்றில் படுகாயத்துக்குள்ளான சின்னவன் கந்தையா என்பவர் யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டு 3 நாட்கள் ஆகியும் அறிவிழந்த நிலையில் இருப்பதால் இவரது வாக்குமூலம் இன்னமும் பதியப்படவில்லை (கா. நி)

காலத்தில் மக்கள்நல்வாழவு வாழத் திருக்கூட்டத்தார் அயராது உழைப்பது,

விழா நடத்துவதென்றும் தீர்மானிக்கப்பட்டது.

# 14-ம் திகதி அரசாங்க ஊழியர் மோதல் ஆரம்பம்

யாழ்ப்பாணம், சனி

யாழ். மாவட்ட அரசாங்க ஊழியர் விளையாட்டுச் சங்கத்தினல் யாழ். மாவட்ட அரசாங்க இலாகாக்களிடையே நடாத்தப்படும் உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டி இம்மாதம் 14-ந் திகதி யாழ். கோட்டை மைதானத்தில் மிக கோலாகலமாக ஆரம்பமாகின்றது.

இச்சுற்றுப்போட்டியில் யாழ். மாவட்டத்திலிருந்து 8 இலாகாக்கள் பங்குபற்றுகின்றன. அவற்றின் விபரங்கள் பின்வருமாறு:

யாழ். பொலிஸ் விளையாட்டுக்கழகம், காரைநகர், கடற்படை, யாழ். மாநகர சபை பொழுதுபோக்குக் கழகம், காங்கேசன்துறை சிமெந்து தொழிற்சாலை பொழுதுபோக்குக் கழகம், யாழ். தபால் ஊழியர் விளையாட்டுக்கழகம், இராணுவ விளையாட்டுக்கழகம், யாழ். சிறைச்சாலை, இலங்கை போக்குவரத்துச்சபை.

இம்மாதம் 14-ந் திகதி ஆரம்பமாகும் முதல் முதல் போட்டியில் யாழ். பொலிஸ் விளையாட்டுக்கழகமும் காரைநகர் கடற்படை கோஷ்டியும் மோதிக் கொள்ள இருக்கின்றது. 15-ந் திகதி தபால் கோஷ்டியும் இராணுவ விளையாட்டுக்கழகமும் மோதிக்கொள்ளும். (தே. நி.)

## "நல்ல பிரஜைகளாக திகழவழி'

நல்லூர், வெள்ளி

விளையாட்டுத் துறையில் வீரர்கள் போட்டிஇடுவதன் மூலம் அவர்கள் எதிர்காலத்தில் நல்ல பிரஜைகளாக திகழ்வதற்குவழிவகுப்பதுடன் போட்டி, பொறாமை, சுயநலம் முதலிய தீய குணங்களிலிருந்து விலகிக்கொள்வதற்கு தங்களை தயார்செய்துகொள்கின்றனர் என யாழ். மாவட்ட உதவி அரசாங்க அதிபர் திரு. ரி. முருகேசம்பிள்ளை சங்கானை மாலியவத்தை விளையாட்டுக்கழக வருடாந்த விளையாட்டுவிழாவில் பிரதம விருந்தினராக கலந்து உரையாற்றுகையில் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

விழாவிற்கு முன்னாள் பட்டினசபைத் தலைவர் திரு சி. க. திருச்சிற்றம்பலம் தலைமைவகித்தார்.

தொடர்ந்து திரு. முருகேசம்பிள்ளை பேசுகையில் கூறியதாவது:

வலிமேற்குபகுதியில் விளையாட்டு மைதானம் இல்லாதது ஒருபெரும் குறையாகும் முடிக்குரிய காணிகள் ஏதாவது இவ்விடத்தில் இருக்குமானல் அதனைபெறுவதில் கஷ்டமிராது. இதற்கு பொதுமக்களும் விளையாட்டுத்துறையில் சிரத்தை காட்டும் பலரும் உழைத்தால் வெகுவிரைவில் இக்குறைபாட்டை நாம் நிவர்த்திசெய்துகொள்ளலாம்.

## மீண்டும் திறக்கப்பட்டது

கோப்பாய், வெள்ளி

கோப்பாய் கிராமசபைப் பகுதிக்குச் சொந்தமான கல்வியங்காட்டிலுள்ள நெசவுநிலையமொன்று நீண்டகால இடைவெளிக்குப்பின்னர் கோப்பாய் கி. ச. தலைவர் திரு. பரமானந்தராசாவின் முயற்சியால் மீண்டும்திறந்துவைக்கப்பட்டது.

## இலங்கைக்கு முதலிடம்

கொழும்பு, வெள்ளி

இலங்கையில் மிருகநோய் நன்கு கட்டுப்படுத்தப்பட்டுள்ளது.

1967க்கு முந்திய ஐந்து வருட காலங்களில், மொத்தம் 26 இலட்சம் பிராணிகளில் (கோழி இனம் தவிர) வருடமொன்றுக்கு சராசரி 1200 பிராணிகளே வியாதியால் இறந்தனஇப்புள்ளிவிபரத்தின்படி 24,000 பிராணிகளுக்கு ஒரு பிராணி வீதமே உயிரிழந்திருக்கின்றது. எனவே, இத்தகைய நோய் தடுப்பு அலுவல்களில் தென் கிழக்கு ஆசியாவிலேயே இலங்கை முதலிடம் வகிக்கின்றது.

இப்பொழுது நிலைமை மேலும் சிறப்படைந்துள்ளது. ஏனெனில் 1968-ல் மொத்தம் 137பிராணிகளே வியாதியால் இறந்திருக்கின்றன.

வர் ஆகியோர் உரைநிகழ்த்துவர்.

ந்து கொள்வார்களென்றும், தெரியவருகிறது.

# 'ஈழநாடு' முதலெழுத்துப் போட்டி - [11]

பலநோக்கு கூட்டுறவுச் சங்கம் என்ற பெயரின் முதலெழுத்துகளுக்கு ஒரு புதிய பெயரை சிருஷ்டி செய்யுங்கள் என்று கேட்டிருந்தோம். நேயர்கள் அனுப்பிய பல புதுமையான பெயர்களிலிருந்து பின்வருவது மிகச்சிறந்ததென்று போட்டிக்குழு தீர்மானித்தது.

**பரிசுபெறும்விடை**

## 'பதுக்கல் நோக்கத்தோடு கூடிய சத்திரம்'

இதை எழுதி பத்துரூபாய் பரிசு பெறுபவர்: சு. விக்னராசா, 8, பிரப்பங்குளம்வீதி, வண்ணார் பண்ணை

இப்போட்டிக்கு இனி ஒரேஒருபரிசே வழங்கப்படும் என்பதை நேயர்களுக்கு தெரிவித்துக் கொள்ளுகின்றோம்

**பாராட்டுக்குரியவை**

பின்வரும் நேயர்களும் பாராட்டுக்குரிய விடைகளை அனுப்பினர்கள்: செ. சூசையா, குருநகர். சி. சரஸ்வதி, திருநெல்வேலி, கிழக்கு, க. ஜெயபாலன் வியாபாரிமூலை, கே. அரசேஸ்வரன், நல்லூர். மு. இராசரட்னம் பூநகரி. தி. குகராசன் யாழ்ப்பாணம்.

**அடுத்த போட்டி**

12-வது போட்டிக்கு தபாற்கந்தோர் சேமிப்பு வங்கி என்ற பெயரின் த. க. சே. வ. என்ற முதலெழுத்துகளுக்கு நகைச்சுவையுடன் கூடிய ஒரு புதிய பெயரை தாருங்கள் பார்க்கலாம்.

**நிபந்தனைகள்:**

விடையைக் கீழ்க்காணப்படும் கூப்பனில் நிரப்பி, உங்கள் பெயரையும் விலாசத்தையும் தெளிவாக அதில் எழுதி அனுப்புதல் வேண்டும். அனுப்பும் விலாசம் **முதலெழுத்துப் போட்டி** (11) 'ஈழநாடு' த. பெ. **இலக்கம் 49, யாழ்ப்பாணம்.** விடைகளை 'ஈழநாடு' காரியாலயத்தில் நேரடியாகவும் சமர்ப்பிக்கலாம். ஒருவர் எத்தனை விடைகளையாவது எழுதி அனுப்பலாம். ஆனல் ஒவ்வொரு விடையும் கூப்பனில் எழுதப்படவேண்டும். 'ஈழநாடு' ஊழியர்களும் அவர்களது குடும்பத்தினரும் இப்போட்டியில் கலந்துகொள்ளமுடியாது. எல்லா விஷயங்களிலும் போட்டிக்குழுவின் தீர்ப்பே முடிவானது. விடைகள் 9-7-69க்குமுன் எமக்கு வந்து சேரவேண்டும். மிகச் சிறந்த விடைக்குப் பரிசுப் பணமாக ரூபா 10. வழங்கப்படும். வெற்றி பெறுபவர்களின்பெயரும் விலாசமும் முதலெழுத்துப்போட்டி (12) வெளியாகும்போது தெரிவிக்கப்படும்.

'ஈழநாடு'

**முதலெழுத்துப் போட்டி (11)**

விடை: ..............................................

..............................................

பெயர் : ..............................................

விலாசம் : ..............................................

..............................................

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மணிவாக்கு

'நமது உழைப்பின் பயனை நாம் எதிர்பார்க்காமல் இருக்கலாம். ஆனால் நல்ல செயல் பலனளித்தேதீரும் என்பது எனது உறுதியான நம்பிக்கை.'

— மகாத்மா காந்தி


# ஈழநாடு

Eelanadu National Tamil Daily
Telegram: "EELANADU" Jaffna.
Post Box: 49, Jaffna. Telephone: 389.

யாழ்ப்பாணம், சௌமிய வருஷம் ஆடி மாதம் 21 ந்திகதி (5 7 69)


## கூட்டுறவு இயக்கம்

இன்று சர்வதேசக்கூட்டுறவுத்தினம். ''ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு ஒற்றுமை நீங்கில் அனைவர்க்கும் தாழ்வு'' என்பதுதான் கூட்டுறவு இயக்கத்தின் தாரக மந்திரம். இலங்கையில் கூட்டுறவு இயக்கம் வளர்ச்சியடைந்துள்ளபோதிலும் 'ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு' என்ற கூட்டுறவின் அடிப்படை இலட்சியம் வெற்றிபெறவில்லையென்று சொல்வதில்தவறில்லை.

'கூட்டுறவு' என்பது இலங்கை மக்களுக்குப் புதிய விஷயமல்ல. ஆயினும் இன, மத, சாதி, அரசியல் வேறுபாடுகளால் இன்று இங்கு மக்கள் மத்தியில் 'கூட்டுறவு' நீங்கி, பிளவும், பிரிவினையும்அதிகரித்து முன்னேற்றம் தடைப்பட்டுப் பின்தங்கிய நிலையில் மக்கள் வாழவேண்டியேற்பட்டுள்ளது இலங்கையில் குறிப்பாக யாழ்ப்பாணப் பகுதியில் கூட்டுறவு இயக்கம் பலதுறைகளிலும் வெற்றியீட்டியிருக்கிறது. அமைச்சர்களும் கூட்டுறவு இயக்கத்தவர்களும் யாழ்ப்பாணத்து கூட்டுறவாளர்களைப் பாராட்டிவந்துள்ளனர். கூட்டுறவுச் சங்கங்கள், சமாஜங்கள் மக்களின் கஷ்டங்களை நீக்குவதற்கு அரும்பெரும் பணி செய்துவந்துள்ளன, வருகின்றன என்பதை மறுக்க முடியாது என்றாலும் அயல் நாடான இந்தியாவிலும் மற்றும் அபிவிருத்தியடைந்துள்ள பல வெளிநாடுகளிலும் கூட்டுறவு இயக்கம் ஆற்றிவரும் பணிகளுடன் ஒப்பிடுகையில் இங்கு கூட்டுறவுத்துறை இன்னும் எவ்வளவோ சாதனைகளைச் செய்யமுடியும். இந்தியாவில் மாநில அரசாங்கங்களும் மத்திய அரசாங்கங்களும் கூட்டுறவுத்துறைக்கு உதவியும் ஊக்கமும் அளித்துவருவதால் தட்டுப்பாடான அத்தியாவசியப் பொருள்களை நியாயமான விலையில் — எல்லோரும் பெறக்கூடியமுறையில் 'சுப்பர்மார்க்கட்டுகள்' அமைக்கப்பட்டுள்ளன. தமிழ் நாட்டின் தலைநகராம் சென்னை நகரிலேயே 'காமதேனு', 'காவேரி' என இரண்டு 'சுப்பர் மார்க்கட்டுகள்' அமைக்கப்பட்டுள்ளது இதற்குச் சான்று.

இங்கு கூட்டுறவு இயக்கம் சிறந்த சேவைசெய்துள்ள போதிலும் விரும்பத்தகாதவர்கள் சமூகசேவை மனப்பான்மையற்றவர்கள் இந்த இயக்கத்தில் நுழைந்ததால் அதன்சேவைகள் தடைப்படவும் 'பெருச்சாளிகளின்' தொல்லைகள் அதிகரிக்கவும் காரணமானது. கூட்டுறவுத் துறை இங்கு வலுப்பெறவும் அதனால் மக்கள் நன்மையடையவும் வேண்டுமானால் கூட்டுறவு இயக்கத்துக்கு அதனுள்ளேயேஇருக்கும்'பெருச்சாளிகளை' களையெடுத்து, 'உடன் பிறந்தே கொல்லும் வியாதி' என்ற ஆபத்தை அகற்ற வேண்டியது அவசியம்.

கூட்டுறவுத்துறை பற்றி விசாரணைசெய்த கமிஷனின் அறிக்கை இன்னமும் வெளிவரவில்லை. புனிதமான கூட்டுறவு இயக்கத்திலுள்ள கேடுகளை நீக்கி அதைப் புனிதப்படுத்தி மக்களுக்கு நல்ல சேவைசெய்யக்கூடிய இயக்கமாக மாற்றியமைப்பதற்கு கமிஷன் நல்ல யோசனைகளைத் தெரிவிக்குமென எதிர்பார்ப்போம்.


## குடிசன கணக்கெடுப்புக்கு கம்ப்யூட்டர் உதவும்

கொழும்பு, வெள்ளி

சேவைகள், பொலிஸ்படை

# விண்ணுலக விருந்தாளி டாக்டர் கைலாயபிள்ளை உலகுக்கு இனியராய்த்திகழ்ந்த உத்தமர்

— வித்துவான் பொன். முத்துக்குமாரன் —



விண்ணுலகத்திலே தெய்வமாக நிரந்தரவாழ்வு பெற்ற திருவள்ளுவரது இன்பமனையிலே அவர் முன்னிலையிலே அறிஞர்கள் சிலர் கூறியிருக்கின்றனர். மண்ணுலகில் அவர் வாழ்ந்த நாளிற்போலவே விண்ணுலகிலும் அவரது மனையில் புலவர்கள் கூடியிருந்து உரையாடுவதற்குக் குறைவேயில்லை. புலவர்களோ பேரறிஞர்கள். அவர்கள் கூடியிருக்குமிடத்திற் சிந்திக்கப்படுவது சிறிய விஷயமாய் இருக்குமா? அன்று அவர்கள் ஆராய்ந்த விஷயம் மிகப் பெரிய விஷயம். இந்தமண்ணுலக வாழ்வைப்பற்றிய விஷயம்தான். விண்ணுலகினை அவர்கள் மேவிவாழ்ந்தாலும் அவர்களது சிந்தனையெல்லாம்மண்ணுலகின் நிலையைக் குறித்து எண்ணுபவைதாம். 'இந்த மண்ணுலகில் அறிவு வளர்கிறது என்று சிலர் சொல்லுகிறார்கள். ஆனால் அழிவுதான் வளர்கிறது! அன்புதான் ஒழிகிறது!' இந்த மண்ணுலகம்எப்படி வாழப்போகின்றதோ? இது விண்ணுலக அறிஞர் ஒருவரின் வேதனையான கேள்வி. அதனைத் தொடர்ந்து அப்புலவர்கள் உள்ளத்தில் ஓர் ஆராய்ச்சி தொடங்குகின்றது. இந்த மண்ணுலகம் எதனால் நிலைத்திருக்கின்றது? என்பது தான் அன்று அவர்கள் ஆராய எடுத்துக்கொண்ட விஷயம். இந்த விஷயம் விண்ணுலகத்தார்களன்றி மண்ணுலகத்தார்களே மிக மிக ஆவசியகமாகச் சிந்திக்க வேண்டிய விஷயம். அணுக்குண்டுகளைச் செய்துவைத்துக்கொண்டு அவதிப்படும் மண்ணுலக வாசிகள்தாம் அவசரமாக ஆராயவேண்டிய விஷயம். இத்தகைய அரிய விஷயத்தைப் பற்றிய ஆராய்ச்சியிலே ஈடுபட்டுள்ள அந்தப் புலவர்களுள் மிக்க துடிப்புடைய புலவர் ஒருவர் ''இந்த உலகம் மழையினாலேதான்நிலைபெறுகின்றது'' என்கிறார். ''இல்லை, இல்லை. அரசனின் நல்லாட்சியினாலேதான் இனிது நடக்கின்றது'' என்

வெளியூர் வாசிகள் அங்கு வரும்போதே அவதானித்திருந்தனா பிரயாணிகள் அனைவரும் குறித்த ஓர் இடத்திற்கே செல்லக் கூடி நிற்கின்றனர் என்பதையும் அவ்வெளியூரார் அறிந்து கொண்டனர். சிலவிநாடி கழித்து இரட்டைத் தட்டு வசு ஒன்று அங்கு வந்து சேருகின்றது வரிசையாய் நின்ற பிரயாணிகள் ஒவ்வொருவராய் வசுவண்டியில் ஏறி அமர, அவ்வெளியூர் வாசிகளும் அவர்களைத் தொடர்ந்து வண்டியில் ஏறி ஒருபக்கத்தே இருந்து கொண்டனர். முற்காலத்திலே காவிரிப்பூம் பட்டினத்திலே இந்திரவிழா நடைபெறும்போது தேவரும் அதனைக் காணவந்து மக்கள் வடிவில் மக்களுடன் திரிவார்கள் என்று சொல்வார்கள் அதுபோல தமக்குள் ஏற்பட்டஐயத்தைப்போக்கி விடைகாணவந்த தேவர்களாகிய அவ்வெளியூர் வாசிகள் இங்கே மக்களுடன் கலந்து வசுவண்டியில் பிரயாணஞ் செய்கின்றார்கள்! வெளியூர் வாசிகளான அவ்வைவருள் முதுபெருங் கிழவர் மற்றைய நால்வருக்கும் வையகத்தின் நிலைமையைக் காட்டுவாராய், ஒவ்வொருஉரையாடலையும் ஒவ்வொரு நிகழ்ச்சியையும் தவறவிடாமல் அவதானிக்கும்படி குறிப்பால் அறிவுறுத்து

இருமும் போதெல்லாம் என்னைவிட அவரே வேதனைப்பட்டார்! தாமாகவே யானிருந்த இடத்துக்கு வந்து, ''ஏன் இவ்வளவு கஷ்டம்? ஒரு மருந்து தருகின்றேன். இரண்டு நாளில் இருந்த இடம் தெரியாமல் எல்லாம் மறைந்துவிடும்'' என்று எனக்கு பரிவாக கூறிவிட்டு, தாம் போய் மருந்து கொண்டுவருவதாகப் புறப்பட்டார். அவருடைய ஊருக்கும் யானிருந்த இடத்துக்கும் குறைந்தது பத்து மைல் தூரமாவதிருக்கும். முன்னொருபோதும் அறியாத என்பொருட்டாக, என் வேதனையைப் பார்த்துப் பொறுக்காமல், என்னிடத்தில் பிரதியுபகாரம் ஒன்றினையும் எதிர்பாராமல் மருந்து கொணர்ந்து குணமளிப்பதற்காக, போக்குவரத்து வசதி குறைந்த அந்த நாளில் அவ்வளவு தூரத்தையும் அற்பமாகக் கருதி விரைந்தாரே, அது என் நெஞ்சிருக்கும்வரை நினைவிருக்குமே!''

இதனைக் கேட்டுக்கொண்டிருந்த மற்றோர் அன்பர் அவரது பேச்சிடை மறித்து, 'அந்தப் புண்ணியமூர்த்தியின் அன்பையும், அருஞ் செய்கைகளையும் இந்தச் சிறிய நாவினால் எப்படி எடுத்துச்சொல்வது? இதோ பாருங்கள், நான் இப்பொழுது இப்படி நிமிர்ந்து உறு

பண்பாளர் வாழும் ஊர் அங்குள்ள பண்பாளர்களுள் எதிர்நாயகம் என்பவர் ஒருவர். எதிர்நாயகம் வைத்திய திறனிலும் மாண்பான செயலிலும் எதிர்யாரும் இல்லாதவர்.

வலம்புரிச் சங்கு மதிப்பரிய முத்தினை ஈன்றமைபோலப் பெருங்குணப் பிரபுவாகிய எதிர்நாயகம், கயிலாயபிள்ளை என்னும் பெறற்கரும் செல்வனைப் பெற்றெடுத்தார். மைந்தன் பிறந்த சில ஆண்டுகளில் தந்தை வானுலகடைந்தனர் தாயின் தனியன்பிலே கயிலாயபிள்ளை வளர்ந்தார்; கற்பன கற்றார். உருவிலும் உயர் குணத்திலும் உலகம் போற்றத்தக்கவராய் காளைப் பருவத்தையடைந்து தமது தந்தை ஆற்றிய வைத்தியப் பணியைத் தொடர்ந்து செய்ய விரும்பி, கொழும்பிலுள்ள ஆயுர்வேதக்கல்லூரியிற் சேர்ந்து, பயிற்சிபெற்று பாராட்டத்தக்க தேர்ச்சி பெற்றார். உலகத்திலே கற்றோரெல்லாம் அறிவு பெற்றாரில்லை செல்வம் முற்றும் பெற்றோரெல்லாம் செந்தண்மை நெஞ்சில் உற்றாரில்லை. செல்வனிடத்தில் இரக்கமில்லை, இரக்கமுள்ளவனிடத்தில் செல்வமில்லை பேராற்றல் உள்ளவனிடத்தில் பிறருக்கு உதவி செய்யவேண்டுமென்னும் உள்ளம் இல்லை, பிறர்க்கு உதவி செய்யவேண்டுமென்பவனிடத்தில் பேராற்றல் இல்லையே. இதுதான் நாம் காணும் உலகஇயல்பு. இந்த உலக இயல்புக்கு மாறாக உதாரணபுருஷராக வைத்திய கலாநிதி கயிலாயபிள்ளை வாழ்ந்து காட்டினார். அவரிடத்திலே எத்துணை வைத்தியத்திறமை இருந்ததோ அத்துணை அவரது மனத்துக் கண்ணும் சீரிய குணங்களும். விளங்கிக்கிடந்தன. ஒருவர் துன்பப்படுவதைக் கண்டால், அவர் தமக்கு இன்னார் இனியார் என்றோ, ஏழை செல்வர் என்றோ, அவரால் தமக்குப் பின்னர் நன்மை ஆகும் ஆகாது என்றோ, அணுவளவேனும் சிந்தியாது உதவி செய்து மகிழ்வார். அவரது

## ஐயாறன் எழுதுவது

நாவலர் மகாநாடு விழா மலரைப் பார்த்தேன். பொன்னெழுத்தால் பொறித்த அம்மலர் நாவலர் பெருமானின் பெருமைக்கேற்ற முறையிலே அமைந்துள்ளது. மிகக் குறுகியகாலத்துக்குள் இவ்வளவு சிறப்பான ஒரு மலரை அளித்தவர்களைப் பாராட்ட வேண்டும்.

இம்மலர் ஈழத் தமிழகத்துக்கு நாவலர் பெருமானின் பால் உள்ள பெருமதிப்பையும் பக்தியையும் உணர்த்துவதுடன் ஈழத்தின் பெருமையையும் உயர்த்துவதாகும்.

சில படங்களைப் பார்த்துவிட்டு, நாவலர்பெருமான் கரிய நிறத்தவரென்பது பலர் நினைப்பு. ஆனால் கவியோகி சுத்தானந்தபாரதியார் ''நாவலர் அவரே யாவார் நமது சைவாகமத்தின் காவலர் அவரே'' என்ற தலைப்புடன் எழுதியுள்ள அருமையான கவிதையிலே ''மாந்தளிர் மேனியானை மலர்விழி அழகினானை'' என்று வர்ணித்ததைப் பார்த்ததும், சில அன்பர்களை விசாரித்தேன் அவரது குடும்பத்தைச் சேர்ந்த ஒருவரைக் கூறி, அவர் நல்ல சிவப்புத்தான் என்றும், பாரதியார் கூறியுள்ளது உண்மையாகத்தானிருக்கும் என்றும் தெரிவித்தனர்.

பல அறிஞர்கள் நாவலரைப்பற்றியும் அவரது பணிகள் குறித்தும் எழுதியிருக்கிறார்கள். மாநாட்டுக் குழுத் தலைவரும் இவ்வண்ண மலரை அச்சிட்ட ''மெய்கண்டான்'' அதிபருமான இரத்தினசபாபதி அவர்கள், எழுதுவதாவது:

''அன்பும் ஆர்வமும் பொங்கிக் கரைபுரண்டோட, வெள்ளம்போல் மக்கள் கூட்டம் திரண்டுவர தலைநகரிலிருந்து நாவலர் பெருமானின் திருவுருவச் சிலை யாழ்ப்பாணம் நோக்கிப் பவனி சென்ற காட்சி, யாவர் நினைவிலும் என்றும் நிறைந்திருப்பதாகும்.

''மொழி, சமயம், பண்பாடு ஆகிய துறைகள் யாவற்றிலும் ஈழமக்கள் முன்னேற உந்துகின்றதொரு விழிப்புணர்ச்சி மலர்ந்தது கண்டு நெஞ்சில் உவகை பொங்குகின்றது. உள்ளம் பூரிக்கின்றது. அப்பூரிப்பின் விளைவே இந்த மலர். சைவமும் தமிழும் தழைமக்க, நாம் வாழ

கட்டுரைகள் வந்தவண்ணமிருந்தனவாம். அவசரத்தில் தயாரான இம்மலரில் சிற்சில அச்சுப் பிழைகள் திருஷ்டிபரிகாரம் போல் இருப்பினும், நாவலர் பெருமானைப் பற்றிய பல அரிய விஷயங்களடங்கிய இம்மலர், தமிழரின் பெருமையை உலகுக்கு உணர்த்தும் அரியதோர் வாடாமலராகும்.

0 0 0

நேற்று நல்லையிலுள்ள திருஞானசம்பந்தர் ஆதீனத்திலே ஓர் அபூர்வ நிகழ்ச்சி நடைபெற்றது. வதிரியைச் சேர்ந்த சில (ஹரிஜன) அன்பர்களுக்கு மதுரை குருமகாசந்நிதானமவர்கள், விசேஷ தீட்சையும், சமயதீட்சையும் அளித்து மந்திர உபதேசம் செய்தார்.

குருமூலம் இந்த தீட்சை எடுக்கையில், ஒரு தெய்வீக சக்திபாய்கிறதென்றும், உள்ளம் தூய்மையாகஇருக்கவும் இறை அருள்பெறவும் இந்த ராம ஜபம் பயன்படுமென்றும் அறிவுறுத்தினார்கள்.

இப்படி விசேஷ தீட்சை பெற்றவர்கள் தவம்செய்தவர்கள். இவர்களைக்கூட கோவிலுக்குள் விடப்படாதென்றும் சமயத்தைவிட சாதியே பெரிதென்றும் யாரும் கூறமாட்டார்களென்றே நம்புவோம்.

சுத்த உணவு இல்லாதவர்களும் சமய தீட்சை எடுக்கலாமென்றும், விசேஷ தீட்சை பெறுபவர், சைவ உணவே உண்பவர்களாக இருக்கவேண்டுமென்றும் குருமகா சன்னிதானம் தெரிவித்தார்கள்.

இன்று காலை அவர்கள் கொழும்புக்குப் புறப்படுகிறார்கள். கொழும்பிலும் மலைநாட்டிலும் சிலநாட்கள் இருந்துவிட்டு, பின்னர் யாழ்ப்பாணம்திரும்பிஇரண்டொருநாள் தங்கி, மதுரை திரும்புவாரென்று தெரிகிறது.

0 0 0

நானேயோ தவம்செய்தேன் சிவாயநம எனப் பெற்றேன், தேனாய் இன் அமுதமுமாய்த் தித்திக்கும் சிவபெருமான், தானே வந்தெனதுள்ளம் புகுந்தடியேற்கருள்செய்தான், ஊனாரும்

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

## குடிசன கணக்கெடுப்புக்கு கம்ப்யூட்டர் உதவும்

கொழும்பு, வெள்ளி

1971 மார்ச் மாதத்தில் நடத்தப்படவிருக்கும் குடிசனக் கணக்கெடுப்பு வீடுகளின் கணக்கெடுப்புகளுக்கான தீர்க்கமான திட்டங்கள் இப்போதே தயாரிக்கப்பட்டுவருகின்றன. கணக்கெடுப்பில் பெறப்பட்ட தகவல்களைப் தரப்படுத்துதற்கு இம்முறை முதன் முதலாக மின் கணிப்பொறி (கம்ப்யூட்டர்) உபயோகிக்கப்படவிருப்பதாக கணக்கெடுப்புப்புள்ளிவிவர ஆணையாளர் திரு. எல். பி ராஜகருணா தெரிவித்திருக்கிறார். மின்கணிப் பொறிக்கான மாதிரிகளின் பொருத்தம் சம்பந்தமாக அரசாங்கத்துக்கு ஆலோசனை கூறுதற்கு ஆசிய தூரகிழக்குப் பொருளாதார ஆணைக் குழுவினைச் சேர்ந்த நிபுணர் ஒருவர் இவ்வருடம் டிசம்பர் மாதத்தில் இங்கு வரவிருக்கிறார். இப்பொறியின் உதவியினால் கணக்கெடுப்புத் தகவல்களின் 100 சதவீத அட்டவணைகளை 1 1/2 வருடத்துள் முடிக்கலாம். முன்னைய கணக்கெடுப்புகளில் இதற்கு 4 முதல் 5 வருடங்கள் வரை எடுத்தது. 20 வீத மாதிரி அட்டவணைகளை ஆறு மாத காலத்துக்குள் செய்து முடிக்கலாம்.

சாம்ராஜ்ய நாடுகளில் சனக்கணிப்பு 1971-ல் நடத்தப்படவிருப்பதனால், இலங்கையும் அந்நடைமுறைக்கேற்பக கணக்கெடுக்கவிருக்கிறது. சனக்கணிப்புக்கென 50 இலட்சம் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது. 1871-ல்முதன் முதலாக இலங்கையில் சனக்கணக்கெடுக்கப்பட்டபோது சனத்தொகை 25 இலட்சமாக விருந்தது. கடைசியாக நடைபெற்ற சனக்கணிப்பின் அடிப்படையில் இப்போதைய நிலையைப்பார்க்கும்போது 1971 மார்ச் மாதத்தில் சனத்தொகை 1 கோடி 25 இலட்சமாக விருத்தல் வேண்டும். கடந்த 100 வருடத்துள் ஏற்பட்ட சனப்பெருக்கம் ஒரு கோடியென்பது இதிலிருந்து புலனாகும்.

கணக்கெடுப்பு குறைவாக விருப்பதைத்தடுக்கும் நிமித்தம், கணக்கெடுப்பு ஆக்கப்பட்டு சகலரும் தமது வீட்டில் இருப்பதற்கு வசதிசெய்யப்படும். அத்தியாவசிய சேவைகளைச் சேர்ந்த ஆஸ்பத்திரி, போக்குவரத்து சேவைகள், பொலிஸ்படை முதலாம் சேவைகளைச்சேர்ந்தவர்களைக் கணக்கெடுப்பதற்காகத் தனியாக ஒரு கணிப்பு எடுக்கப்படும்.

குடிசனமதிப்பு விபரங்கள் நான்கு தொகுதிகளாக வெளியிடப்படும். சனங்களின் பொதுவான குணபாவங்கள், படிப்பறிவும், கல்வியும், கைத்தொழிலும் வேறு தொழில்களும் ஆகியவற்றோடு பொதுவான ஒரு அறிக்கையும் வெளியிடப்படும். 1972-ல் விவசாயக் கணிப்புஒன்று வேறாக நடத்தப்படும்.

## 'எந்த அரசாங்கத்தாலும் முடியாது'

வென்னப்புவ, வெள்ளி

'நாட்டிலுள்ள ஒவ்வொரு பிரஜைக்கும் அரசாங்க உத்தியோகம் வழங்க எந்த அரசாங்கத்தினாலும் முடியாது. நாட்டில் நிலவும் வேலையில்லாப் பிரச்சினையை அரசாங்க உத்தியோகத்தை எல்லோருக்கும் வழங்கி எந்த ஒரு அரசாங்கமும் தீர்த்துவைக்க முடியாது.'

நாத்தாண்டியா தொகுதியிலுள்ள ஐவுளி நெசவுக் கூட்டுறவு சங்கத்தின் வருடாந்த பொதுக் கூட்டத்தில் உரையாற்றுகையில் வர்த்தக அமைச்சர் திரு. ஹியு பர்னான்டோ மேற்கண்டவாறு தெரிவித்தார்.

கிராம அபிவிருத்தி உதவி அதிபர் திரு. எஸ் எ. பர்னான்டோபிள்ளை, நாத்தாண்டியா காரியாதிகாரி திரு. ஹெக்ரர் சில்வா உட்படப் பலர் இக்கூட்டத்தில் உரையாற்றினர்.

## பிரசவ விடுதி

யாழ்ப்பாணம், சனி

பாஷையூரில் ஒரு பிரசவ விடுதி நிறுவுவதற்கான ஒழுங்குகள் செய்யப்பட்டு வருகின்றன.

யாழ்ப்பாணம் எம். பி. திரு. ஜி. ஜி. பொன்னம்பலத்தின் முயற்சியினால் இப்பிரசவ விடுதி நிறுவுவதற்காக, பாஷையூரிலுள்ள காட்டுக்கந்தோர் பங்களா சுவீகரிக்கப்பட்டுள்ளது. இந்தப்பங்களாவிற்குப் பின்னால் உள்ள காணியில், வீடமைப்புத்திட்டமொன்று உருவாக்கப்படுமென்றும் கூறப்படுகிறது.

இப்பத்திரிகை ஈழநாடு லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேலை வீதி 63ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1969ம் ஆண்டு ஜூலை மாதம் 5-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது

ஒருவர் "இந்த உலகம் மழையினாலேதான் நிலைபெறுகின்றது" என்கிறார். "இல்லை, இல்லை. அரசனின் நல்லாட்சியினாலேதான் இனிது நடக்கின்றது" என்கிறார் மற்றொரு புலவர். அவ்விருவரையும் மறுத்து வேறொரு புலவர் "கற்றவர்கள் நல்லவழியிது என்று காட்டுவதனால் அவர்களாலேயே உலகம் அழிவின்றி வாழ்கின்றது என்கிறார். இவ்வாறு ஒவ்வோர் அறிஞரும் ஒவ்வொரு காரணத்தைக்கூறித் தாம்சொல்வதே சரியெனச் சாதிக்கின்றார்கள். இவ்வளவு வாதப் பிரதிவாதங்களையெல்லாம் கேட்டுக்கொண்டு திருவள்ளுவரும் அங்கேதா அவர்களுள் ஒருவராய் இருக்கின்றார் அறிவே வடிவமாய் இருக்கும் அவரது திருமுக சாந்தத்தின்முன் புலவர்களின் பேச்சாரவாரம் மெல்ல மெல்ல அடங்கி அங்கு ஒருவிதபுனிதஅமைதி நிலவுகின்றது. வானோக்கும் பயிர்கள்போல புலவர்கள் எல்லாருடைய கண்களும் வள்ளுவர் பெருமானது திருமுகத்தையே நோக்குகின்றன தங்களது வினாவுக்கு விடை - ஆராய்ச்சிக்கு முடிவான பொருள் அப்பெருமானது திருவாக்கிலிருந்து கிடைக்காதா என்னும் ஆர்வம் அவர்களது பார்வையில் நன்கு புலனாகின்றது வள்ளுவர் பெருமானோ யாதும் வாய் திறந்து கூறியருளவில்லை மண்ணுலகினை நோக்கித் தம்முடன் வருமாறு கைக்குறிப்பாற் காட்டி, அவர்களை அழைத்துக்கொண்டு வருகின்றார் அவர்களது தேவசரீரம் மனித சரீரமாய் மாறிவிடுகின்றது

ஒழுக்கத்தில் நின்று பழுத்த கிழவர் ஒருவரும் நடுத்தர வயதுடைய நால்வருமாக ஐந்துபேர் வெளியூர் வாசிகள் யாழ்ப்பாண வசு நிலையத்தினை நோக்கி விரைந்துவருகின்றனர் சுழிபுரம் வழியாகக் காரைநகர் செல்லும் வசு நின்று புறப்படும் இடத்தில் மாத்திரம் அதிகமான பிரயாணிகள் கூடிப் பெரியதொரு வரிசையில் நிற்பதைக் காண்கின்றனர் அந்த வெளியூர் வாசிகள் இன்ன இடத்திற்குத்தான் தாங்கள் செல்லவேண்டுமென்னும் எண்ணமில்லாதவர் ஆயினும் மக்கள் அதிகமாய்க் கூடிநின்றஅந்த வரிசையிலே தாமும் சேர்ந்துகொள்கின்றனர் வசு வண்டிக்காக அங்கு வரிசையில் நிற்கும் பிரயாணிகளின் முகத்தில் அரியதொரு பொருளை இழந்த துயரம் பரவியிருந்தது கண்கள் ஒளியிழந்து சோகந்தோய்ந்திருந்தன அதனை அந்த

கும் வையகத்தின் நிலைமையைக் காட்டுவாராய், ஒவ்வொருஉரையாடலையும் ஒவ்வொரு நிகழ்ச்சியையும் தவறவிடாமல் அவதானிக்கும்படி குறிப்பால் அறிவுறுத்துகின்றார்.

வசுவண்டி நகரத்தொடங்கியதும் அதனுள்ளிருந்த சோகமே வடிவான பிரயாணிகளின் உரையாடலும் தொடங்குகின்றது, "உங்களுக்கு அவர் எப்படிப் பழக்கம்?" ஒருவர் தம்பக்கத்திலுள்ளவரை வினவுகிறார்.

"அவர் எனக்குப்பழக்கமானவர், என்னுடைய நண்பர் என்று சொல்ல என் நாஎழவில்லை. உள்ளபடி சொன்னால் ........... அவர்தான் இந்த உயிரை இந்த உடலில் நிலைக்க வைத்த தெய்வம் கைலாயபிள்ளை என்ற பெயர் அவருக்கு எவ்வளவு பொருத்தம்! கைலைப் பெருமான்தான் கயிலாயபிள்ளை என்ற பெயர்தாங்கி வைத்திய நாதனாகிய அவர் இங்கே வைத்தியத் தொண்டினையே மேற்கொண்டு மண்ணில் எங்கள் மத்தியில் மனிதனாய் வாழ்ந்தாரோ என்று நான் மட்டுமென்ன, எத்தனையோ மக்கள் வாயாரப் போற்றுகிறார்கள் உதாரணமாக ஒரு சம்பவத்தைக் கேளுங்கள். (இப்படி அவர் தொடங்க அந்த வெளியூர்வாசிகளில் முது பெருங் கிழவர் தவிர மற்றைய நால்வரும் கதை கேட்கும் ஆவலோடு காதைக் கூர்மையாக்கிக் கொண்டு முன்புறமாய் நெருங்குகிறார்கள்) பல வருடங்களுக்கு முன் ஒருநாள் என் மாமனார் வீட்டில் ஒருவர் நோயினால் கடுமையாக வேதனைப்பட்டுக்கொண்டிருந்தார். என் மாமனாருக்கும் வைத்தியச் செம்மல் கைலாயபிள்ளைக்கும் சிநேகம் உண்டு. ஆனால் நான் அவரை அந்நாளில் முற்றாக அறிந்திருக்கவில்லை. ஆகவே என் மாமனார் தமது வைத்திய நண்பரிடம் சென்று அவரை அழைத்துவந்தார். வந்த அப்பெரியார் நோய் நாடி, நோய் முதல் நாடி, அது தவிர்க்கும் வழி நாடி மருந்து கொடுத்தார். அவர் நமது வீட்டுக்கு வந்தபோது வைத்தியப் பெரியாராய் வந்தார். வந்து சேர்ந்த விநாடிமுதல்நமக்கினியநண்பராய் நல்ல உறவினராய்த் திகழ்ந்தார். "ஒரு நாட் பழகினும் பெரியோர் கேண்மை இருநிலம் பிளக்க் வேர்வீழ்க்கும்மே" என்ற அறிவுரைக்கு அவர் அழகான உதாரணம். அது மட்டுமா? என்னை அந்நாளில் இருமல் பீடித்து நன்கு வருத்தியது. யான் இருமுவது அவரது நெஞ்சினைப் புண்படுத்துவதுபோல, யான்

யின் அன்பையும், அருஞ்செய்கைகளையும் இந்தச் சிறிய நாவினால் எப்படி எடுத்துச்சொல்வது? இதோ பாருங்கள், நான் இப்பொழுது இப்படி நிமிர்ந்து உறுதியாய் இருக்கவும், நிற்கவும், நடக்கவும் செய்தவர் அவர். வாத நோயினால் கூனி வருந்திய யான், இன்று கூன் நிமிர்ந்து, நோய் முற்றாய் மறைந்து, திடகாத்திரமாய் உங்களோடு பிரயாணஞ்செய்கின்றேனே! இவ்வளவிற்கும் என்னிடம் ஒரு செப்புக்காசுதானும் வாங்கியிருப்பாரா? யானும் அவரும் ஒரு குடும்பத்தைச் சேர்ந்தவருமல்ல யானும் அவரும் ஓர் ஊரவருமல்ல அப்படியிருக்க, அவருடைய அரும் பண்பு என்னை அவருடைய குடும்பத்துள் ஒருவனாக்கிவிட்டது!"

"உண்மைதான் உங்களை மட்டுமல்ல எங்களையும் இன்னும் எத்தனை எத்தனையோ மக்களையும் தம் நண்பராக்கி, நல்வாழ்வு வாழவைத்துவிட்டு, இன்று அவர் போய்விட்டார். இவரைப்போல இந்த உலகத்தில் எமக்கு இனியார் இனி யார்!"

இங்ஙனம் ஒருவர் ஏங்கி இரங்கிக் கூறிய சொற்களைக் கேட்டதும் அந்த வெளியூர் வாசிகள் ஒருவரையொருவர் பார்த்துத் தாமும் மிக்க அனுதாபங் கொண்டனர். முதுபெருங் கிழவரோ ஒரு கணம்கண்களை மூடி உள்ளத்துள்ளே உணர்வுவியந்துவிம்மிதமுற்ற முகத்திற் பிரகாசிக்க மௌனியாய்க் காட்சியளித்தார். அவர் அவ்வாறாக, வண்டியுள்ளிருந்த மற்றோரன்பர் ஏதோ கேட்டறியத் துடித்தார். யாரைக் கேட்பது, எப்படிக் கேட்பது என்று தெரியாமல் தயங்கினார். அவரது தயக்கத்தைக் குறிப்பாலறிந்த ஒரு பெரியவர்—படித்துப் பெரிய உத்தியோகம் வகித்தவர்போல் காணப்பட்ட அவர், "தம்பி, உம்முடைய ஆவல் எனக்குத் தெரிகிறது நமது வைத்தியச் செம்மல் கயிலாயபிள்ளை அவர்களுடைய வரலாறு அறிய வேண்டுமென்பதுதானே உமது ஆவல்?" சொல்கின்றேன்" என்றுகூறத்தொடங்கினார்.

'யாழ்ப்பாணத்தில் முன்னே உள்ளது ஒரேஒரு நல்லூர்தான். "எவ்வழி நல்லவர் ஆடவர் அவ்வழி நல்லைவாழிய நிலனே" என்ற பழம் பாடலின்படி பின்னே பலபல ஊர்கள் நல்லூராயின. அத்தகைய நல்லூர்களுள் ஒன்றாக யாழ்ப்பாண நகரிலிருந்து மேற்கே பத்து மைல் தொலைவில் பண்ணாகம் என்னும் ஊர் உள்ளது. பண்ணாகம் என்னும் ஊர்

தமக்கு இன்னார் இனியார் என்றோ, ஏழை செல்வர் என்றோ, அவரால் தமக்குப் பின்னர் நன்மை ஆகும் ஆகாது என்றோ, அணுவளவேனும் சிந்தியாது உதவி செய்து மகிழ்வார். அவரது முன்னோர் தேடிய செல்வம் எல்லாம், நோயுற்றோரிடமிருந்து பிரதிபயன்நோக்காது மருந்தும் பிறவும் உதவியமையிலேயே செலவாயின அத்தகைய அருங்குணச் செம்மலை ஆசையோடு வேண்டி, சுழிபுரம் கிராம சபையார் தமது இலவச வைத்தியசாலையில் பணியாற்றுமாறு செய்தனர். அவரது பெரும்புகழ் கேட்டறிந்த யாழ்ப்பாண மாநகர சபையார் தாம் நடத்தும் இலவச ஆயுர்வேதவைத்திய சாலையில் தலைமை வைத்தியராய்ப் பணிசெய்யுமாறு வேண்டிப் பயன்பெற்றனர். நல்லார் ஒருவர் வாழ்ந்ததனால் நாடெல்லாம் நன்மையடைந்தது! அவர் இன்று மறைந்துவிட்டார். அவர் செய்த நன்மைகள் மக்களை நல்லவராக்கி நல்வாழ்வு வாழத்தூண்டுகின்றன; அவரிடத்திற் காணப்பட்ட அருங்குணங்கள் அவரோடு பழகினோரையும் அவரைப் போலப் பண்போடு வாழப் பயிற்றுகின்றன.''

இவ்வாறு அப்பெரியார் வரலாறு கூறிமுடிக்க, வசு வண்டியும் வழக்கம்பரையை வந்தடைந்துவிட்டது. வண்டியில் இருந்து பிரயாணிகள் எல்லோரும் இறங்கி வடக்குநோக்கி வழிக்கொண்டனர். அவர்களைத் தொடர்ந்து சென்ற அந்த வெளியூர்வாசிகள் வீதியின் பக்கமெல்லாம் மோட்டார் வண்டிகள் நிரைத்து நிற்றலையும் மக்கள் திரளாக நடந்து செல்லுதலையும் கண்டு, தாமும் அவரைத் தொடர்ந்து சென்றனர். எங்கும் சோகம்! எல்லார் கண்களிலும் கண்ணீர்! யாவரிடத்திலும் அவரது நன்றிப் பேச்சு! அப்பொழுது வெளியூர்வாசிகளுள் ஒருவரான முதுபெருங்கிழவர் மெல்ல முணுமுணுப்பது போல வாய்க்குள் ஏதோ சொல்கிறார். அதுமற்றைய நால்வர்களுக்கும் விளங்கிவிட்டது. "நயனொடு நன்றி புரிந்த பயனுடையார்பண்பு பாராட்டும் உலகு" என்னும் திருக்குறளினைத் தான் அம்முது பெருங்கிழவர் தமக்குள் சொல்லிக்கொண்டிருந்தார். எங்கே சென்றாலும் யாவரிடத்திற் கேட்டாலும் நயனொடு நன்றிபுரிந்த கயிலாயபிள்ளையின் பண்பினைத் தான்பேசுகிறார்கள்; பாராட்டுகிறார்கள்.

வெளியூர்வாசிகள் மேலும் தங்கள் செலவை மேற்கொள்ளவில்லை. காரணம் முதுபெருங்கிழவர் அந்நாள் வரையும் அவ்வளவில் நிறுத்தி, தங்கள் சொந்த ஊருக்கு வழிக்கொள்ளலாம் எனக் குறிப்பாலுணர்த்தியதே யாகும்.

வெளியூர் வாசிகளாய் வந்தாரை அங்கே காணவில்லை. ஐந்து சோதிகள் வான்வழியாக மேலே சென்றன! திருவள்ளுவர் திருமுகத்தினை மற்றைய நான்கு புலவர்களும் மகிழ்ச்சியோடுநோக்குகின்றனர். வினாவிற்குவிடையறிந்த மனநிறைவு அவர்களது மலர்ந்த நோக்கிலே புலப்படுகின்றது. "பெருமானே, பொய்யில் புலவர் விடைகண்டோம்! "பண்புடையார்ப் பட்டுண்டு உலகம் அஃதின்றேல், மண்புக்கு மாய்வது மன்" எனத் தேவரீர் அருளிய வாய்மையை இன்று மண்ணுலகிலேயே கண்டோம்! தமக்கென வாழாது பிறர்க்கென வாழும் பண்புடையார் வாழ்வதனாலேயே இந்த மண்ணுலகம் இன்றுவரை இருந்தது; இன்னும் நிலைத்திருக்கப் போகின்றது. "இதனைக் கேட்ட வள்ளுவர்பெருமான், இவ்வளவுநேரமும் தாம்கொண்டிருந்த மௌனத்தைத் தவிர்த்து, "புலவர்களே, நீங்கள் மகிழ்வது கண்டு யானும் உவகையானேன். இந்த உவகையைவிட மேலானதொரு பேருவகை இனிநமக்கு எய்த இருக்கின்றது. யாம்மண்ணுலகிலே சற்று முன்பு கேள்வியுற்றுவியந்த பண்பாளர் யாம் மண்ணுலகு நோக்கி வந்தசமயத்திலேதான்எமது விண்ணுலகுக்கு விருந்தாளியாய்ச் சென்றுள்ளார். அவரை நாம் வரவேற்று உபசரித்து மகிழ்வோம். விரைந்துவாருங்கள்" என்று கூறியவாறே அவர் முன்னே விரைந்து செல்ல மற்றை நான்கு புலவர்களும்அவரை நிழல் போலத் தொடர்ந்து விண்ணுலகடைந்தனர்.

தொரு விழிப்புணர்ச்சி மலர்ந்தது கண்டு நெஞ்சில் உவகை பொங்குகின்றது. உள்ளம் பூரிக்கின்றது. அப்பூரிப்பின் விளைவே இந்த மலர். சைவமும் தமிழும் தழைக்க, நாம் வாழ உதித்த ஆதவனும் நாவலர் பெருமான் திருவடிகளுக்கு அன்புக் காணிக்கையாக இம்மலரைச் சமர்ப்பிக்கின்றோம்''

முதல் சில பக்கங்கள் தான் பார்க்க முடிந்தது. அதற்குள் அதை வேறு அன்பர்கள் எடுத்துச்சென்றுவிட்டனர். பல நாட்கள் படித்துப் பயன்பெறக்கூடிய விஷயங்களும் அருமையான படங்களும் இதில் அடங்கியுள்ளன.

இந்த மலரைத் தயாரித்த குழுவின் பெயரைக் காணவில்லை. கடைசி வரையிலும்

பெற்றேன், தேனாய் இன்
அமுதமுமாய்த் தித்திக்கும்
சிவபெருமான், தானே வந்
தெனதுள்ளம் புகுந்தடியேற்
கருள்செய்தான், ஊனாரும்
உயிர் வாழ்க்கை ஒறுத்
தன்றே வெறுத்திடவே.

—மாணிக்கவாசக சுவாமிகள்.

## யுவதி ஆஸ்பத்திரியில்

யாழ்ப்பாணம், சனி

'கோஸ்டிக்' சோடா மருந்தைக் கரைத்துக் குடித்ததாகக் கூறப்படும் நாயன்மார்கட்டைச் சேர்ந்த 23 வயது யுவதியான ரூபராணி என்பவர் யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

(கா. நி)

## 'பொன்னெழுத்தில் பொறிக்க வேண்டும்'

யாழ்ப்பாணம், சனி

யாழ்ப்பாணம் மாநகர சபையின் இலவச ஆயுள்வேத வைத்தியசாலையில் டாக்டராகக் கடமையாற்றி மறைந்த திரு ஏ. கைலாசபிள்ளையின் மறைவு குறித்து அகில இலங்கை உள்ளூராட்சி மன்றசித்த ஆயுள்வேத வைத்தியர் சங்கத் தலைவரான டாக்டர் வி. கு. சண்முகநாதன் அனுதாபச் செய்தியொன்றை பத்திரிகைக்கு விடுத்துள்ளார்.

1954-ம் ஆண்டு இந்த வைத்தியர் சங்கம் ஆரம்பிக்கப்பட்ட காலத்திலிருந்து 1969-ம் ஆண்டுவரை காலஞ்சென்ற டாக்டர் கைலாசபிள்ளையே தலைவராகக் கடமையாற்றினார் என்றும் வைத்திய சங்கத்துக்கு அன்னார் செய்த சேவைகள் காலவரம்பில் பொன்னெழுத்துக்களால் பொறிக்கப்பட வேண்டியதென்றும் இவ்வறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

(கா. நி)

## இரங்கற் கூட்டம்

சுழிபுரம், சனி

இன்று பிற்பகல் காலஞ்சென்ற திரு. ஏ. கைலாசபிள்ளையின் மறைவுக்கு அனுதாபம் தெரிவிக்குமுகமாக வழக்கம்பரை வாசிகசாலை மண்டபத்தில் திரு ஹன்டி பேரின்பநாயகம் தலைமையில் ஓர் இரங்கற் கூட்டம் நடைபெறவிருக்கிறது. பல பிரமுகர்கள் அஞ்சலி செலுத்தி உரையாற்றுவர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org